

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 81 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 13 – திங்கள்கிழமை 30 அக்டோபர் 2023 – மதுரை 12 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 81: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 13 - Monday 30 October 2023 - Madurai 12+12 Pages ₹ 5.00

## 'ஈ டிவி பாரத்' செய்தித்தளத்திற்கு அளித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி 13 மொழிகளில் வெளியானது!

**சென்னை, அக். 30 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈ டிவி பாரத் செய்தித்தளத்திற்கு அளித்துள்ள இப்பேட்டி இந்தியா முழுவதும் 13 மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 'ஈடிவி பாரத்' செய்தித் தளத்துக்கு அளித்த நேர்காணலின் விவரம் வருமாறு:-

**நெறியாளர் :** *தமிழ்நாட்டின் முதலமைச்சராக மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகிறீர்கள். காலை உணவுத் திட்டமாக இருக்கட்டும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகட்டும் பெரும் பொருட்செலவு வைக்கக்கூடிய இத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுக்கு இருக்கும் சவாலாக எதைக் கருதுகிறீர்கள்?*

**தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** திராவிட மாடல் அரசின் சிறப்பான திட்டங்களாக நீங்கள் குறிப்பிடும் இந்தத் திட்டங்களின் வரிசையில் மகளிருக்கான விடியல் பயணம் திட்டமும் முக்கியமானது. இவை அனைத்துமே அன்றாடத் தேவைக்கான திட்டமாக மட்டுமின்றி, எதிர்கால வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் அமைந்துள்ள காரணத்தால், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் எத்தகைய சவால்கள் இருந்தாலும் அதனை முழுமையாக நிறைவேற்றித் தருவதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கிறது.

### சவால்களை எதிர்கொண்டு திறம்பட ஆட்சி நடக்கிறது!

முந்தைய அ.தி.மு.க ஆட்சியின் பத்தாண்டுகாலத்தில் உருவாக்கப்பட்ட கடன் சுமை – நிதிப் பற்றாக்குறை, நிர்வாகச் சீர்கேடு போன்றவற்றை சமாளித்து, தற்போதைய ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதி ஒதுக்கீட்டு அணுகுமுறை போன்ற சவால்களின் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுபட முடியாவிட்டாலும், இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்றிருக்கிறது. தமிழ்நாட்டை இன்று இந்தியாவே திரும்பிப் பார்க்கும் விதமாக, தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது. ஆகவே இந்தியாவுக்கே முன்னோடியான இந்த மக்கள்நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**நெறியாளர் :** *வடக்கில் வலதுசாரிகளின் பெரும்பலமாக இருக்கும் இந்துத்வா அடிப்படையிலான ஒருங்கிணைப்பை உடைக்க வேண்டிய தேவை இருப்பதாகக் கருதுகிறீர்களா? இதனை உடைத்து வாக்குகளைப் பெற இந்தியா கூட்டணியின் உத்தி என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** மதவாதம் என்பதைத் தவிர பா.ஜ.க.விடம் வேறு கொள்கை எதுவும் இல்லை! ஆட்சிக்கு வந்தாலும், சாதனைகளைக் காட்டி வாக்குகளைப் பெற முடியவில்லை. வெறுப்பரசியலை வைத்தே வாக்கு பெற நினைக்கிறார்கள்.

### மதவாதத்தை நம்பாமல் கொள்கைகளை நம்பி நிற்கிறோம்!

ஆனால் இந்தியா கூட்டணியின் வலிமை என்பது மதநல்லிணக்கம். நாங்கள் அரசியல்சட்டம் வரையறுக்கும் கொள்கைகளை நம்பி நிற்கிறோம். பன்முகத்தன்மை கொண்ட இந்திய மாநிலங்களின் உரிமைகளை மதித்தல், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மீது கவனம் குவித்தல் போன்றவற்றில் நம்பிக்கை வைத்து நிற்கிறோம்.

ஆகவே, பா.ஜ.க.வின் மதவாத அரசியலுக்கு எதிராக உள்ள அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைத்து, தேர்தல் களத்தில் உள்ள வெற்றி வாய்ப்புகளுக்கேற்ப கூட்டணிக் கட்சிகளிடையே விட்டுக் கொடுக்கும் தன்மையை ஏற்படுத்தி, மக்களின் பேராதரவுடன் வெற்றிபெறுவதே இந்தியா கூட்டணியின் தேர்தல் உத்தி. அதில் வெற்றி பெற முடியும் என்பதை சமீபத்திய இடைத் தேர்தல்கள், கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல் போன்றவை காட்டியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

### தேசிய அரசியலில் தி.மு.க.வின் பங்களிப்பு மிகப்பெரியது!

**நெறியாளர் :** *தி.மு.க. இப்போது தேசிய அரசியலில் அழுத்தமாக காலூன்ற முயல்கிறதா? உங்கள் உரைகள் முன்னெப்போதும் இல்லாத அளவில் இந்தியிலும் வெளியாகின்றன. பிரதமராகும் லட்சியம் தி.மு.க. தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இருக்கிறதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- தேசிய அரசியலில் தி.மு.க. ஏற்கனவே மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கிறது. தன் அழுத்தமான முத்திரையை கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதித்து இன்றைக்கு இந்தச் சிகரத்தை எட்டியுள்ளது.**

**வங்கிகள் தேசியமயம் உள்ளிட்ட முற்போக்கான செயல்பாடுகளுக்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் அரசுக்கு உறுதுணையாக நின்று தேசிய அரசியலில் தி.மு.க.வின் முத்திரையைப் பதிக்கச் செய்தவர் தலைவர் கலைஞர்.**

**நெருக்கடி நிலைக் காலத்தில் இந்தியாவின் எந்த மாநிலமும் முன்னெடுக்காத ஜனநாயக உரிமைக்குரலை முன்னெடுத்து, வடஇந்திய அரசியல் தலைவர்களும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க தமிழ்நாட்டில் களம் அமைத்துக் கொடுத்தவர் கலைஞர்.**

**சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசின் முதுகெலும்பாக இருந்தது தி.மு.கழகம். அதன் காரணமாக இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27% இடஒதுக்கீடு வழங்க வித்திட்டு, அணையா விளக்கான "சமூக நீதி"யை இந்தியா முழுமைக்கும் ஏற்றி வைத்தது.**

**தி.மு.க. இருக்கும் இடத்தில் மதவாதம் இருக்காது என்ற பாராட்டைப் பெறும் விதத்தில், குறைந்தபட்ச பொது செயல்திட்டத்துடன் வாஜ்பாய் அரசுக்கு ஆதரவளித்து, இந்தியாவில் கூட்டணி அரசு தன் முழுமையான ஆட்சிக்காலத்தை நிறைவு செய்ய முடியும் என்பதற்கு உறுதுணையாக நின்று, ஒன்றியத்தில் நிலையான ஆட்சிக்கு வித்திட்டது கலைஞரின் தி.மு.கழகம்தான்.**

**இரண்டு முறை டாக்டர் மன்மோகன் சிங் பிரதமராகப் பொறுப்பேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலும் தி.மு.க. முதன்மையாக இருந்தது. குடியரசுத் தலைவர் தேர்தல்களில் தி.மு.க.வின் நிலைப்பாடுகள் தேசிய அளவில் கவனம் பெற்று, வெற்றிகரமாக அமைந்துள்ளன. தலைவர் கலைஞரின் வழியில், நாட்டின் இன்றையச் சூழலையும், சமூக வலைதளங்கள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும் இந்தியா கூட்டணியின் செயல்பாட்டில் தி.மு.க தன் பங்களிப்பை விரிவுபடுத்தியுள்ளது.**

**என் உயரம் எனக்குத் தெரியும் என்று சொன்னவர் எங்கள் தலைவர் கலைஞர். மு.க.ஸ்டாலினுக்கும் தன் உயரம் நன்றாகத் தெரியும்!**

**நெறியாளர் :** *ஒன்றிய அரசு புதிதாகக் கொண்டு வரும் மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் வைக்கிறது. ஏற்கனவே உள்ள சட்டங்களும் இந்தியில் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றன. இந்தி ஆதிக்க எதிர்ப்புக்காக அறியப்பட்ட தி.மு.க.வும் தமிழ்நாடும் இந்த விஷயத்தில் என்ன செய்யப் போகின்றன?*

### பா.ஜ.க.வின் 'இந்தி' திணிப்பை கடுமையாக எதிர்க்கிறது தி.மு.க.!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இதுகுறித்து நாடாளுமன்ற மாநிலங்களவை, மக்களவை இரண்டிலுமே தி.மு.க.வின் எம்.பி.,க்கள் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். முழுக்க முழுக்க இந்தியிலான அறிவிப்புகள், அழைப்பிதழ்களைக் கிழித்தெறிந்து எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள்.

பா.ஜ.க. அரசின் ஒரே நாடு, ஒரே மொழி என்கிற மறைமுகத் திட்டம், தமிழை மட்டுமின்றி இந்தியாவின் பிற மாநிலங்களில் பேசப்படும் அவரவர் தாய்மொழிகளுக்கும் எந்தளவு ஆபத்தை உண்டாக்கும் என்பதை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பல மாநிலங்களிலும் இதுகுறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்களைப் பொறுத்தவரை நாங்கள் எந்த ஒரு மொழிக்கும் எதிரிகள் அல்ல.

எங்கள் மொழி மீது எந்தவொரு மொழியைத் திணித்தாலும் அதை உறுதியாக எதிர்ப்பவர்கள். அந்த நிலை தொடரும். நாடாளுமன்றத் தேர்தல் முடிவு களுக்குப் பிறகு, அமையவிருக்கிற புதிய ஆட்சியில் அனைத்து மொழிகளுக்கும் உரிய உரிமையும் முக்கியத்துவமும் சமமாக வழங்கப்படும்.




தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 30-10-2023

# பொய்ப் பிரமாணம் எடுத்துள்ள ஆளுநர் 1

**வா**யைத் திறந்தாலே பொய்யும் புளுகும்தான் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு வருகிறது. ஒரு சம்பவத்தை வைத்து அவர் நூற்றுக்கணக்கான பொய்களைச் சொல்லத் தொடங்கி விட்டார்.

ஆளுநர் மாளிகை இருக்கும் சாலையில் கடந்த 25 ஆம் தேதி என்ன நடந்தது?

**25.10.2023 அன்று மதியம் 3 மணியளவில், கருக்கா வினோத் (42 வயது - E-3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தின் வழக்கமான குற்றவாளி) என்பவர் ஆளுநர் மாளிகை அருகே தனியாக சாதாரணமாக நடந்து வந்தார். பெட்ரோல் நிரப்பிய நான்கு பாட்டில்களைக் கொண்டு வந்து, அவற்றை ஆளுநர் மாளிகை அமைந்துள்ள சர்தார் படேல் சாலையில் எதிர்ப்புறத்தில் இருந்து எறிய முயன்றார். ஆளுநர் மாளிகையின் வெளிப்புறத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த தமிழ்நாடு காவல்துறை போலீசாரால் தடுக்கப்பட்டார். அப்போது சம்பவ இடத்திற்கு எதிரே சற்று தூரத்தில் இருந்து இரண்டு பாட்டில்களை வீசினார். அவை ஆளுநர் மாளிகையின் அருகே சர்தார் படேல் சாலையில் வைக்கப் பட்டிருந்த தடுப்பரண்களுக்கு அருகே விழுந்தது. பாதுகாப்பு போலீசாரால் உடனடியாக கைது செய்யப்பட்டார். காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டு விட்டார். இச்சம்பவத்தால், பொருட்களுக்கோ அல்லது எந்த நபருக்கோ எவ்வித சேதமோ, காயமோ ஏற்படவில்லை.**

- இவ்வளவுதான் நடந்தது. ஆனால் ஆளுநர் மாளிகை சொல்லும் பொய், பெட்ரோல் பாட்டில்களை விடப் பெரிய பொய் பாட்டில்களாக இருக்கின்றன.

★ **பொய் 1:** ராஜ்பவன் மெயின் கேட் எண் 1 வழியாக பெட்ரோல் குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் சிலர் உள்ளே நுழைய முயன்றனர்.

**உண்மை:** குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் ஏராளமானவர்கள் என அப்படி யாரும் வரவில்லை. வினோத் என்ற ஒரே ஒரு நபர் மட்டும்தான் வந்தார். அவரும் சாலையின் அந்தப் பக்கம் இருந்து வாசலை நோக்கித் தான் வீசினாரே தவிர, உள்ளே நுழைய முயற்சிக்கவில்லை.

நந்தனம் சிக்னலில் இருந்து நடந்தே வருகிறார் வினோத். நந்தனம் கலைக் கல்லூரி, சைதாப்பேட்டை பாலம், சின்னமலை வரை நடந்தே வருகிறார். அவர் தனி ஆளாகத் தான் நடந்து வருகிறார். அங்கிருந்து சைதை நீதிமன்றம் வழியாக நடந்து சென்றுள்ளார். இது ஆளுநர் மாளிகைக்கு எதிர்புறம் உள்ள சாலையாகும். இந்த சாலையைக் கடந்தால்தான் ஆளுநர் மாளிகை வாசலுக்கு செல்ல முடியும். சாலையை வினோத் கடக்கவில்லை. ஆளுநர் மாளிகைக்கு எதிரே நின்று ஆளுநர் மாளிகை முன்பு வீச முயற்சித்துள்ளார். அங்கு பணியில் இருந்த ஐந்து காவலர்கள் உடனே அவரை தடுத்து அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவை அனைத்தும் வீடியோ காட்சிகளாக உள்ளன.

★ **பொய் 2:** பாதுகாப்புப் பணியாளர்கள் தாக்குதலைக் கட்டுப்படுத்த முயன்ற போதும், மற்றொரு பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதனால் பிரதான நுழைவாயிலுக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது.

**உண்மை:** பிரதான நுழைவாயிலில் பலத்த சேதமும் ஏற்படவில்லை. சிறு சேதமும் ஏற்படவில்லை. பாட்டில் வீசப்பட்டது பிரதான வாசலில் இருந்து 30 மீட்டர் தூரத்தில் - பேரிகாட் தாண்டி சாலையில்தான் விழுந்துள்ளது. எனவே நுழைவாயிலில் எந்த சிறு சேதமும் கிடையாது.

★ **பொய் 3** : வினோத்துடன் நிறையப் பேர் வந்துள்ளார்கள்.

**உண்மை:** கண்காணிப்புக் கேமரா பதிவுகளை ஆராய்ந்ததில், மேற்படி நபர் நந்தனத்தில் இருந்து சம்பவ இடம் வரை தனியாகவே வந்துள்ளார்.

★ **பொய் 4** : அந்த நபரை தப்பிக்க விட்டு விட்டார்கள்.

**உண்மை:** உடனடியாக அவர் கைது செய்யப்பட்டார். சரியாகச் சொல்வதாக இருந்தால் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார்.

★ **பொய் 5** : அவர் மீது வழக்கு பதியவே இல்லை.

**உண்மை:** அன்றைய தினமே J-3 கிண்டி காவல் நிலையத்தில் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக அவர் IV-வது பெருநகர குற்றவியல் நடுவர் அவர்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, 09.11.2023 வரை சிறையில் வைக்கப்பட்டார்.

★ **பொய் 6** : ஆளுநர் அவர்களுக்கு எதிராக பகிரங்க மிரட்டல், அவதூறுப் பேச்சு மற்றும் தாக்குதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதால் இந்த பாட்டில் வீச்சு சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் நியாயமான முறையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை.

**உண்மை:** குற்றவாளி கைது செய்யப்படுகிறார். நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார். சிறையில் அடைக்கப்பட்டுகிறார். ஆளுநர் மாளிகைக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படுகிறது. இதற்கு பின்னால் சதி ஏதாவது இருக்குமா என காவல் துறை விசாரிக்கிறது. இதற்கு மேல், மேல் நடவடிக்கை என்ன எடுக்க முடியும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

★ **பொய் 7**: உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

**உண்மை:** உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ **பொய் 8** : ஏப்ரல் 19, 2022 அன்று மயிலாடுதுறை சென்ற போது ஆளுநரின் வாகனம் தாக்கப்பட்டது. இது சம்பந்தமாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை.

**உண்மை:** ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் அப்பகுதியை கடந்து சென்ற பின்னர் அங்கு கூடியிருந்தவர்களில் சிலர் கருப்புக்கொடிகளை சாலையில் வீசினர். அக்கொடிகள் ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் முழுமையாக சென்றபின் பின்னால் வந்த வாகனங்கள் மீது விழுந்தன. இச்சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு 73 பேர் கைது செய்யப்பட்டனர். மேற்படி வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

ஆளுநரின் கான்வாய் மீது கற்கள் மற்றும் கட்டைகள் வீசப்பட்டன என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

**- தொடரும்**



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை 26.10.2023 அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், ஒட்டன்சத்திரம் நகர்மன்றத் தலைவர் க.திருமலைச்சாமி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சு.இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன் உள்ளிட்டோர் உள்ளனர்.

### அளப்பறிய திட்டங்களை அள்ளி வழங்கும் நம்

# முதல்வருக்கு வரும் காலங்களில் மக்கள் பேராதரவு வழங்க வேண்டும்!

## ஒட்டன்சத்திரம் தொகுதியில் மாநாடு போல் நடைபெற்ற பிரமாண்ட விழாவில் ரூ.117.85 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் அர.சக்கரபாணி உரை!

ஒட்டன்சத்திரம், அக். 30-

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, தலைமையில் 26.10.2023 அன்று நடைபெற்ற மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.

விழாவில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, வருவாய்த் துறை சார்பில் 687 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட அட்டை, முதலமைச்சரின் சாலை விபத்து நிவாரணம் 40 பயனாளிகளுக்கு ரூ.27.00 இலட்சம் மதிப்பிலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் பாரம்பரிய வேளாண் வளர்ச்சி மற்றும் பிற திட்டங்களின் கீழ் 1000 பயனாளிகளுக்கு ரூ.1.41 கோடி மதிப்பிலும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சொட்டுநீர் பாசனக் கருவிகள் 1001 பயனாளிகளுக்கு ரூ.1.90 கோடி மதிப்பிலும்,

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 250 பயனாளிகளுக்கு ரூ.16.38 இலட்சம் மதிப்பிலான தேய்ப்பு பெட்டிகள், 425 பயனாளிகளுக்கு ரூ.25.50 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்கள், மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயனாளிக்கு ரூ.2.58 கோடி மதிப்பிலும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஒருங்கிணைந்த தீவண மேம்பாட்டு இயக்கம் (2023-2024) திட்டத்தின் கீழ் 35 பயனாளிகளுக்கு ரூ.3.69 இலட்சம் மதிப்பிலும்,

மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறை சார்பில் 768 பயனாளிகளுக்கு ரூ.14.78 இலட்சம் மதிப்பிலும், தொழிலாளர் நலத்துறை சார்பில் கல்வி ஊக்கத்தொகை மற்றும் ஓய்வூதியம் 51 பயனாளிகளுக்கு ரூ.25,590 மதிப்பிலும், மருத்துவத்துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 140 பயனாளிகளுக்கு ரூ.7.00 கோடி மதிப்பிலும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் 120 துாய்மைப் பணியாளர்களுக்கு நலவாரிய அட்டை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 603 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ .2.54 கோடி மதிப்பிலும் ,

மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 6509 பயனாளிகளுக்கு ரூ .101.32 கோடி மதிப்பில் பயிர்க்கடன் மற்றும் இதர கடனுதவிகள் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சார்பில் 175 பயனாளிகளுக்கு ரூ.17.50 இலட்சம் மதிப்பிலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.2.66 இலட்சம் மதிப்பில் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் என மொத்தம் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**முதல்வர் வழங்கும் திட்டங்கள்!**

இவ்விழாவில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை திறம்பட செயல்படுத்தி வருகிறார் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசின் நலத்திட்ட உதவி சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, சொல்லாத பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார். 234 சட்டமன்ற தொகுதிகளும் சீரான வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அனைத்து தொகுதிகளிலும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மகளிர் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மகளிருக்கு நகர பேருந்தில் கட்டணமில்லா பயண சேவை வழங்கப்பட்டு வருகிறது அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கூட்டுறவு வங்கிகளில் மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு ரூ.20.00 இலட்சம் வரை கடனுதவிகள் வழங்கப்படுகிறது.

**ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாதம் ரூ.1000/-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை கொண்டு வந்துள்ளார். தகுதியான இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது இத்திட்டத்தின் மூலம் சுமார் 1.06 கோடி குடும்பத்தலைவிகள் பயனடைந்துள்ளனர் மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாதவர்கள் இசேவை மையத்தில் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி புத்தகம், வீட்டு வரி ரசீது ஆகியவைகளுடன் பதிவு செய்தால் அந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியிருந்தால் அவர்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இப்படி எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழும் வகையில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்.

அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது இதன்மூலம் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 17.50 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுபோல் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் . குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

**“தமிழ்நாடு அரசின் மரம் வளர்ப்புத் திட்டம்!”**

“மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னதுபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் வனப்பரப்பை 23 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக உயர்த்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள் . திண்டுக்கல் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 35 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது.

வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. மரங்களை வளர்ப்பதால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் அகற்றப்பட்டு சுகாதாரமான காற்று நமக்கு கிடைக்கும் . நமது வருங்கால சந்ததிகள் சுகாதாரமான காற்றை சுவாசிக்க நாம் மரங்களை வளர்க்க வேண்டும்.

தமிழகத்தில் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர் களில் தகுதியானவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆட்சிப்பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் தமிழகத்தில் இதுவரை சுமார் 16 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன குடும்ப அட்டை எதிர்பாராதவிதமாக தொலைந்து போனால் புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது மேலும், நியாய விலைக் கடைகளில் கைரேகை பதிவு மூலம் பொருட்கள் வாங்கும் போது சில சிரமங்கள் ஏற்படுகின்றன அவற்றை தவிர்க்கும் வகையில் விரைவில் கண் கருவிழி மூலம் பதிவு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகள் என நியாயவிலை கடைக்குச் செல்ல முடியாதவர்கள், பொருட்கள் வாங்க வேறு ஒரு நபரை நியமித்து விண்ணப்பம் அளித்தால் அந்த நபரிடம் பொருட்கள் வழங்கப்படும் வகையில் தமிழகததில் சுமார் 3.50 இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர் நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி பருப்பு, எண்ணெய், அந்த சர்க்கரை போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ள “இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48” திட்டத்தில் யாராவது விபத்தில் சிக்கி காயமடைந்தால் அவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கு வழங்கப்படும் சிகிச்சைக்கான செலவை அரசு ஏற்றுள்ளது.

**இரண்டாண்டில் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்!**

தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க அனுமதி அளித்துள்ளார் அதில் 1.50 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்ற தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ .1000 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. அந்த வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் அரசு கலை அறிவியல் கல்லூரிக்கு கள்ளிமந்தையத்தில் ரூ .15 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. விருப்பாட்சியில் தொழிற்பயிற்சி கல்லூரி ரூ .7 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் பெண்கள் கல்லூரி கட்டடம் ரூ.68.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை சேமித்து வைப்பதற்கு குளிர்சாதன கிடங்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரத்தில் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளது விரைவில் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் கோவில் மலைப் பாதையில் ரூ .15.00 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய கிரிவலப்பாதை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் 1500 நியாய விலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழு நேரம் மற்றும் பகுதி நேர நியாய விலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மட்டும் 70 நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு புதிய கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஒட்டன்சத்திரத்தில் 300 கோயில்களுக்கு பணிகள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழகத்தில் 1000 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 300 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள தலா ரூ.2.00 இலட்சம் வீதம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ரூ.4000 கோடி மதிப்பீட்டில் 10,000 கிலோ மீட்டர் சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதில் அதிகபடியான நிதி திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகள் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நமக்கு நாமே திட்டத்தில் சமுதாய கூடங்கள் கட்டுதல் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன . 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படாத திட்டங்கள் கடந்த 2 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதுபோன்ற அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்திற்கும், நம்பிக்கைக்கும் என்றும் ஆதரவு வழங்க வேண்டும் என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் நகர்மன்ற தலைவர் க.திருமலைச்சாமி, மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர் கா. பொன்ராஜ், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர், பி.சி.தங்கம், ஒட்டன்சத்திரம் நகராட்சி துணைத்தலைவர் ப.வெள்ளைச்சாமி, கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சு.இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன், வேளாண்மை இணை இயக்குநர் திருமதி அனுசுயா கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு . பெ.நா.இராம்நாத், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.அனிதா, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஜோ.பெருமாள்சாமி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி முருகேஸ்வரி மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் மேலாளர் திருமதி மு.சுகன்யா, மாவட்ட சமூக நல அலுவலர் கோ. புஷ்பகலா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பூங்கொடி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் நா.சிவக்குமார், வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழி காட்டு மையம் உதவி இயக்குநர் திருமதி பிரபாவதி தனித்துணை ஆட்சியர்(சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி கங்காதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் என்.சாமிநாதன், மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் கமலக்கண்ணன், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மாவட்ட செயல் அலுவலர் திருமதி பி.சுதாதேவி, துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# 13 மொழிகளில் வெளியான முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

## முதல் பக்கத் தொடர்ச்சி

**நெறியாளர்:** *வாட்ஸ்அப் போன்ற சமூகவலைதளங்களை பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தும் விதம் குறித்து வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது காலத்திற்கேற்ப டிஜிட்டல் ஊடகங்களைக் கையாளும் வியூகமா அல்லது அதிகார அத்துமீறலா? இது பற்றிய உங்களின் கருத்து என்ன?*

**சோஷியல் மீடியாக்களில் பரப்பப்படும் பா.ஜ.க.வின் பொய்யுரைகளை முறியடிப்போம்!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ‘வாட்ஸ்அப் யுனிவர்சிட்டி’ என்பது பா.ஜ.க.வின் பொய்ப் பரப்புரைகளுக்குப் பொதுமக்கள் வைத்துள்ள பெயர். டிஜிட்டல் ஊடகங்கள், தொலைக்காட்சி ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் இவற்றில் ஊடுருவலையும் அதிகார பலத்தையும் பயன்படுத்துவது பா.ஜ.க. அரசின் வழக்கமாக இருக்கிறது. சமூக வலைதளங்களிலும் இத்தகையப் போக்குகள் நிலவுவதை வாஷிங்டன் போஸ்ட் வெளிப்படுத்தியுள்ளது. அதிகார அத்துமீறல்களை அம்பலப்படுத்துவதன் ஒரு கோணம்தான், சில ஊடக நெறியாளர்களின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என்கிற இந்தியா கூட்டணியின் புறக்கணிப்பு நடவடிக்கை.

பத்திரிகைகள் - மீடியாக்கள் நடுநிலைமைக்குத் திரும்ப வேண்டும் என்பதே இதன் நோக்கம்! மற்றபடி டிஜிட்டல் மீடியா, சோஷியல் மீடியா போன்றவற்றில் பா.ஜ.க.வின் அதிகார அத்துமீறல்களை, பொய்ப் பரப்புரைகளை, அவிழ்த்து விடும் அவதூறுகளை முறியடிக்கும் வகையில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் ஒருங்கிணைந்த செயல்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

**நெறியாளர்:** *INDIA கூட்டணியின் தற்போதைய நிலை என்ன? கூட்டணியை ஒருங்கிணைக்கும் அல்லது இயக்கும் விசையாக எது உள்ளது?*

**பா.ஜ.க.வின் மக்கள் விரோதச் செயலே ‘இந்தியா’ கூட்டணியை ஒருங்கிணைக்கிறது!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: இந்தியக் கூட்டணி முதல் ரவுண்ட் வெற்றியைப் பெற்றிருக்கிறது. கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல் உள்ளிட்ட இடைத்தேர்தல்களில் அந்த வெற்றி கிடைத்திருக்கிறது. பா.ஜ.க.வின் 9 ஆண்டுகால ஜனநாயக விரோத, அரசியல்சட்ட விரோத, மக்கள் விரோத ஆட்சியே இந்தியா கூட்டணியை ஒருங்கிணைத்திருக்கிறது. பா.ஜ.க.வுடன் இருக்கும் மற்ற நிழல் கூட்டணிகளான “அமலாக்கத்துறை” “வருமானவரித் துறை” போன்றவை மேலும் பல கட்சிகளை இந்தியா கூட்டணிக்கு வரவழைக்கும். அரசியல்சட்டமும் அதன் கொள்கைகளும், மக்களும்தான்தான் எங்கள் கூட்டணியை இயக்கும் விசை!**

**நெறியாளர்:** *கோயில்களின் கட்டுப்பாடு அறநிலையத்துறையிடம் இருப்பதை பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளாரே! அவரின் குற்றச்சாட்டுகளை கவனித்தீர்களா? இதற்குத் தமிழ்நாடு அரசின் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தி.மு.க. ஆட்சிப்பொறுப்பேற்றபிறகு 1118 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான 5473 கோடி ரூபாய் மதிப்புள்ள 5820 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இதனையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் பிரதமரும் பேசியிருக்கிறார். அதற்கு நான் ஏற்கெனவே பதில் அளித்துவிட்டேன்.

இன்றைக்கு பா.ஜ.க. ஆட்சியில் என்ன நடக்கிறது? தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனையை கட்டித் தர இயலவில்லை. நீட் மசோதாவிற்கு ஒப்புதல் தர முடியவில்லை. மாநிலத்திற்கு உரிய நிதி உரிமை - மாநில உரிமையை வழங்குவதில்லை.

தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், அரசியல் பேசி, அரசியல் சட்டப் பதவியான ஆளுநர் பதவியை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவரை ஆளுநராக வைத்து, தமிழ்மொழி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு- தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கு முட்டுக்கட்டை போடப்படுகிறது!

**இன்றைக்கு பா.ஜ.க. ஆட்சியில் என்ன நடக்கிறது? தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவ மனையை கட்டித் தர இயலவில்லை. நீட் மசோதாவிற்கு ஒப்புதல் தர முடியவில்லை. மாநிலத்திற்கு உரிய நிதி உரிமை-மாநில உரிமையை வழங்குவதில்லை.**

**தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், அரசியல் பேசி, அரசியல்சட்டப் பதவியான ஆளுநர் பதவியை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவரை ஆளுநராக வைத்து, தமிழ் மொழி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு-தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்கு முட்டுக் கட்டை போடப்படுகிறது!**

தமிழ்நாட்டிற்கு 9 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் செய்த சாதனைகள் ஏதுமில்லை. சிறப்புத் திட்டங்கள் ஏதுமில்லை. ஆகவே ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு என்ன செய்துள்ளது என்பதைச் சொல்லி வாக்குச் சேகரிப்பதில் பிரதமருக்கு நெருடல் இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு என்ன செய்தோம் என்பதைச் சொல்ல இயலாத நிலையில்- பா.ஜ.க. அரசின் தோல்வியைத் திசைதிருப்பவே தமிழ்நாட்டில் சிறப்பாகக் கோவில் நிர்வாகத்தைச் செய்து கொண்டிருக்கும் இந்து சமய அறநிலையத்துறையை விமர்சிக்கிறார்.

**காவிரி உரிமை காப்பதில் உறுதியாக இருக்கும் எமது அரசு!**

**நெறியாளர் :** *நடப்பு ஆண்டில் காவிரி நீர்ப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது. டெல்டா உழவர்களுக்கு இந்த ஆண்டிற்கான தீர்வு தான் என்ன? காவிரி விவகாரத்தில் அரசியல் ரீதியான தீர்வு சாத்தியமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** அரசியல் ரீதியான தீர்வு கிடைக்கவில்லை என்பதற்காகவே காவிரி நடுவர் மன்றம் துவங்கப்பட்டு, இறுதித் தீர்ப்பு தரப்பட்டு, அது உச்சநீதிமன்றத்தில் இறுதியும் செய்யப்பட்டுள்ளது. உழவர்களுக்குப் பாசனத்திற்கு வேண்டிய நீர் கிடைக்கவே தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணையம் ஆகியவற்றில் வலியுறுத்தி, இதுவரை தண்ணீரைப் பெற்று வருகிறது. காவிரியில் தமிழ்நாட்டு உழவர்களின் - தமிழ்நாட்டின் உரிமையை காப்பதில் எனது தலைமையிலான அரசு என்றும் உறுதியாக இருக்கும்.

**சாதிவாரி கணக்கெடுப்பு - ஒன்றிய அரசின் நிர்வாகப் பட்டியலில் வருகிறது!**

**நெறியாளர் :** *மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நீங்கள் கடிதம் எழுதி உள்ளீர்கள்... ஒன்றிய அரசை எதிர்பார்க்காமல் மாநில அரசே நடத்த வேண்டும் என சில தலைவர்கள் கூறி உள்ளனர். இது சாத்தியமா? தமிழ்நாடு அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வாய்ப்பு உள்ளதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** தமிழ்நாடு சமூகநீதி மண். இன்றைக்கு இந்தியாவில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மண். சாதிவாரிக் கணக்கெடுப்பைப் பொறுத்தமட்டில், “சென்ஸஸ்” என்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் நிர்வாகப் பட்டியலில் இருக்கிறது. அதனால்தான் தி.மு.க.வும் பங்கேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் “சாதிவாரிக் கணக்கெடுப்பு” 2011இல் துவங்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த பா.ஜ.க. அரசு அந்த கணக்கெடுப்பு முடிவை வெளியிடவில்லை. அமைச்சரவையிலேயே 2015இல் இதற்காக நிபுணர் குழு அமைத்தும் இன்று வரை சாதிவாரிக் கணக்கெடுப்பின் அந்த நிபுணர் குழு அறிக்கையையும் வெளியிடவில்லை.

மண்டல் கமிஷன் பரிந்துரை மூலம் எப்படி 27 விழுக்காடு இடஒதுக்கீடு இந்தியா முழுமைக்கும் உள்ள இளைஞர்களுக்கு ஒன்றிய அரசு வேலைவாய்ப்பு கல்வியில் இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்ததோ அது போல ஒன்றிய அரசு எடுக்கும் சாதிவாரிக் கணக்கெடுப்புதான் தமிழ்நாடு உள்பட இந்தியா முழுமைக்கும் சமூகநீதி கிடைக்க வழி வகுக்கும். ஆகவேதான் ஒன்றிய அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பை விரைந்து நடத்தி முடிக்க வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறேன்.

**பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி குறித்து எங்களுக்கு கவலையில்லை!**

**நெறியாளர் :** *பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி உண்மையிலேயே முறிந்துவிட்டதா, இதனால் கூட்டணிக் கணக்குகளில் மாற்றம் ஏற்படுமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: சமீபத்தில் மற்ற மாநிலங்களில், பா.ஜ.க.வுடன் இருந்த கூட்டணியை ஒரு கட்சி முறித்துக் கொண்ட பிறகு நடந்த நிகழ்வுகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இப்போது அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி முறிவு காட்சியையும் பார்க்கிறீர்கள். ஆனால் உங்களுக்கே கூட்டணி முறிந்து விட்டதா இல்லையா என்ற சந்தேகம் எழுகிறது. அக்கூட்டணி முறிந்தாலும் முறியா விட்டாலும் எங்களுக்குக் கவலை இல்லை!**

**ஒன்றியத்தில் 9 ஆண்டுகாலம் பா.ஜ.க. ஆட்சியின் அலங்கோலங்களையும் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளையும் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.**

**இப்போது நல்லாட்சி தரும் தி.மு.க.வை, நல்ல பல மக்கள் திட்டங்களைத் தந்துள்ள இந்த ஆட்சியை, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் சாதனைகளை படைக்கும் தி.மு.க. ஆட்சியை தமிழ்நாட்டில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**நாங்கள் எங்கள் நல்லாட்சி மீது நம்பிக்கை வைத்து களத்திற்கு செல்கிறோம். 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்களை இரண்டரை ஆண்டுகளில் மாற்றி, நிர்வாக எஞ்சினை நேர்த்தியாக செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே தி.மு.க.வின் நல்லாட்சி, தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் நல்லெண்ணம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து நாங்கள் மக்களைச் சந்திக்கிறோம். மக்கள் எங்களுடன் இருக்கிறார்கள்!**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## பசும்பொன்னில்

# தேவர் திருமகனார் நினைவாக 2 மண்டபங்கள்!

## தேவர் ஜெயந்தியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.30-**

**இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தின் இரு நுழைவாயில் களிலும் ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன்கருதி 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அறிவிப்பு வருமாறு:-

தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என்று வீர முழக்கம் இட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் என்கிற சிற்றூரில் மிகுந்த வசதி படைத்த ஜமீன் குடும்பத்தில், 1908ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ஆம் நாள் பிறந்தார். பள்ளிப்படிப்பினை மட்டுமே முடித்திருந்தாலும், அன்னிய நாட்டினால் அடிமைப்பட்டிருந்த அடித்தள மக்களின் அன்றாட வாழ்க்கையே போராட்டமாக இருந்ததைக் கண்ணுற்ற தேவர் பெருமகனார், அம்மக்களின் வாழ்வு மேம்பட தன்னையே அர்ப்பணித்தார்.

ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராட, சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவத்திற்கு தமிழகத்தில் இருந்து பெரும் படையினைத் திரட்டி அனுப்பிய பெருமை தேவர் பெருமகனார் அவர்களையேச் சாரும். 1920ஆம் ஆண்டு அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில் இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் அமலில் இருந்த மிகவும் கொடுமையான குற்றப்பரம்பரை என்கிற சட்டத்திற்கு எதிராக முதன் முதலில் போராடி அச்சட்டத்தினை அகற்றியவர் தேவர் பெருமகனார் ஆவார்.

1939ஆம் ஆண்டு ஜூன் 22, அகில இந்திய பார்வர்டு கட்சியை நிறுவி நேதாஜி சுபாஷ் சந்திர போஸுடன் இணைந்து செயல்பட்டு, 1952ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் அருப்புக்கோட்டை பாராளுமன்ற தொகுதியிலும், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி என பல்வேறு உச்சங்களைத் தொட்டவர் தேவர் பெருமகனார். ‘வங்கத்தில் நேதாஜி; தமிழகத்தில் பசும்பொன் முத்துரா மலிங்கத் தேவர்’ எனத் தலைவர் கலைஞர் அவர்களால் போற்றப் பட்டவர்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளை கொண்ட விடுதலை போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாள் தேவர் ஜெயந்தி விழாவாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் அக்டோபர் 30ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தி வருகின்றனர். நினை விடத்தின் முன் ஒரு சிறிய இடத்தில், குறுகிய நேரத்தில் அதிக கூட்டம் கூடுவதால் பொதுமக்கள் நீண்ட நேரம் திறந்த வெளியில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. வெயில் மற்றும் மழையில் இருந்து அவர்களைப் பாதுகாத்திடவும், கூட்ட நெரிசலை தடுப்பதற்கும் தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் விழாவின் போது நினைவிடத்தின் முன் தற்காலிக கொட்டகை - பந்தல் மற்றும் தடுப்பு அமைக்கப்பட்டு வருகிறது.

தேவர் ஜெயந்தி விழாவின்போது, கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாத்திட, ஒரு நிரந்தர மண்டபம் அமைத்து தர வலியுறுத்தி அரசுக்கு பொதுமக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை அளித்து வருகின்றனர்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிரா மத்தில் அமைந்துள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தின் இரு நுழைவாயில்களிலும் ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன்கருதி 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!**

தேவர் ஜெயந்தியை முன்னிட்டு பசும்பொன்னில் உள்ள தேவர் திருமகனார் நினைவிடத்தில் நேரில் அஞ்சலி செலுத்து வதற்காக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று (30.10.2023) பயணம் மேற் கொள்கிறார்.

## பெண்கள் பொருளாதாரத்தில் பெறும் தன்னிறைவே, பெண்ணுரிமைக்கான அடித்தளம்!

# மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் - மாநிலத்தின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும்!

## திருநெல்வேலியில் நடைபெற்ற அரசு விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

**நெல்லை, அக். 30 -**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1200 டெபிட் கார்டுகள் வழங்குவது உட்பட 9 ஆயிரம் பயனாளிகளுக்கு 157 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர். உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகம் எதிரில் உள்ள வர்த்தக மையத்தில் 27.10.2023 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சட்டமன்ற பேரவைத் தலைவர்.மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில்

ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, திருநெல்வேலி மாநகராட்சி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மகளிர் திட்டம், கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் தூய்மைப்பணி டிராக்டர், மூன்று சக்கர ஸ்கூட்டர்கள், மின்சார தையல் இயந்திரம், வீட்டு மனைப்பட்டாக்கள், விவசாய கடன் அட்டை, கல்வி கடன்கள், தொழில் கடன்கள் உள்ளிட்ட 9 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, ஊரக வளர்ச்சித்துறை சார்பில் கட்டிடங்கள் மற்றும் பாலங்கள், திருநெல்வேலி மாநகராட்சி சார்பில் அரசு மருத்துவமனையில் உறவினர்கள் தங்கும் அறைகள் என புதிய திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கிற வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1200 டெபிட் கார்டுகள் மற்றும் 9 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.157 கோடியே 33 லட்சம் அளவில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் மகத்தான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார். 1 கோடியே 6 லட்சத்து 58 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும், கிட்டத்தட்ட 2 லட்சத்து 48 ஆயிரம் பேர் பயன்பெற்றுள்ளனர். ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய திட்டம் செயல் படுத்தப்பட்டது, இதுவே முதல்முறை. இந்த திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி தான் உங்களுக்கு உரிமைத் தொகை வழங்குவதற்கான தேதி என்றாலும், ஒரு நாள் முன்னதாக 14 ஆம் தேதியே கழக அரசால் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு 1200 டெபிட் கார்டுகளை வழங்குகிறோம் என்றால், இவை பணம் எடுப்பதற்கான கார்டுகள் மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கையை மாற்றப் போகிற துருப்புச்சீட்டு. இந்தத் திட்டத்தை பின்பற்றி, கர்நாடகா, தெலங்கானா போன்ற மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எந்த ஒரு அரசு திட்டத்தை செயல்படுத்தப்படுகிற போதும், மேல்முறையீடு செய்கிற வசதி இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைப் பொறுத்தவரை, விண்ணப்பம் ஏற்கப்படாதவர்கள், மீண்டும் மேல்முறையீடு செய்கிற வசதியைச் செய்துள்ளோம். இதுவரை 11 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர். மேலும், உங்கள் மேல்முறையீட்டைப் பரிசீலிக்க துணை ஆட்சியர், சார் ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு பயிற்சிகளை வழங்கி யுள்ளோம். மகளிர் மட்டுமன்றி திருநங்கையர், மாற்றுத்திறனாளிகளும் இன்றைக்கு இந்தத் திட்டத்தால் பயன்பெற்று வருகின்றனர். மேல்முறையீடு செய்வதற்கான காலம் நேற்று முன் தினத்தோடு முடிவடைந்த நிலையில், அந்த மேல்முறையீட்டு மனுக்களின் மீதான பரிசீலனையை நேற்று சாத்தூர் கோட்டத்தில் ஆய்வு செய்தோம். நான் சட்டமன்றத்தில் பேசியது போல், தகுதியுள்ள ஒரு மகளிர் கூட இந்த திட்டத்தில் இருந்து விடுபட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறோம்.

அது மட்டுமன்றி, அரசின் நலத்திட்டங்கள் உடனுக்குடன் மக்களை சென்றடைய வேண்டும். குறிப்பாக, ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களின் வாழ்வு மேம்பட வேண்டும். இது தான் நம் திராவிட மாடல் அரசின் லட்சியம். அதன் வெளிப்பாடு தான், இன்றைக்கு, மகளிர், மாற்றுத்திறனாளிகள், ஆதி திராவிடர், பழங்குடியினர் என அனைத்து தரப்பு மக்களுக்கும் வீட்டு மனைப்பட்டா , அரசு மருத்துவமனைக்கான உறவினர்கள் தங்கும் அறைகள், வங்கிக் கடன், சுழல் நிதி, விவசாய கடன் அட்டை, வணிக கடன், தொழில் மானியக் கடன், கல்விக் கடன் என 9 ஆயிரம் பேருக்கு 157 கோடியே 33 லட்சம் அளவில் நலத்திட்டங்களை வழங்குகிறோம்.

**மாணவிகளுக்கு வாழ்த்துகள்**

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள், கல்வி, இலக்கியம், விளையாட்டு ஆகிய அனைத்து துறைகளிலும் முன்னேறிட வழிகாட்டும் வகையில், அன்பாடும் முன்றில் எனும் குறும்படத்தையும் வெளியிட்டுள்ளோம். இதனை பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் வாழ்வில் சிறக்க என் வாழ்த்துகள்.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது. நமது முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்



களும் அதை செய்தார்கள், கலைஞர் அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றம் மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று பெரியார் சொன்னார். ஒன்று, கலாச்சார ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, சட்ட ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று, பொருளாதார ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்று பெரியார அவர்கள் சொன்னார்கள்.

பெண்கள் முன்னேற்றத்துக்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகள் என்னென்ன? தந்தை பெரியார் அவர்களே சொன்னார், பணக்காரன் , ஏழை அடிமைத்தனத்தை விட, மேல்ஜாதி, கீழ்ஜாதி அடிமைத்தனத்தை விட, முதலாளி, தொழிலாளி அடிமைத்தனத்தை விட மோசமனது இந்த ஆண், பெண் அடிமைத்தனம் என்று சொன்னார்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது. பெண்களுக்கு படிப்புத் தேவையில்லை. குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும் தான் பெண்களுக்கு வேலை. இப்படிதான் நம்முடைய சமுதாயம் ஒரு காலத்தில் இருந்தது. இது எல்லாத்தையும் எதிர்த்து பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்தது நம்முடைய திராவிட இயக்கம். கழக அரசின் திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான நமது திராவிட மாடல் திட்டங்கள். இரண்டாவதாக, சட்ட ரீதியாகப் பெண்களுக்கு இருந்த முட்டுக்கட்டை என்ன? ஒரு தாய் வயிற்றில் பிறந்தாலும், ஆண் பிள்ளைக்கு மட்டும் தான் அப்பா சொத்திலே உரிமை இருக்கிறது. பெண் பிள்ளைக்கு சொத்திலே உரிமை கிடையாது என்கிற நிலை தான் சட்ட ரீதியாக இருந்தது. ஆனால், நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தான், தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றி னார்கள். இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமைக் கிடைத்திருக்கிறது. இதற்கு காரணம் நமது திமுக அரசு கொண்டு வந்த சட்டம் தான்.

**ஆண்களுக்கு நிகராக பெண்கள் வளர வேண்டும்!**

அடுத்ததாக, பொருளாதார ரீதியில் பெண்களுக்கு இருக்கக் கூடிய முட்டுக்கட்டைகள் என்ன? ஒரு பெண் சிறுமியாக இருக்கும்போது, பணத்திற்காக தனது அப்பாவை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வளர்ந்து திருமணம் ஆனதும் பணத்திற்காக கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்த பெண் வயது முதிர்ந்த காலத்தில் பணத்திற்காக தனது மகனை எதிர்பார்த்திருக்க வேண்டும். இப்படி தான் இருக்கிறது பெண்களின் நிலை. இந்த நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும்.

எனவே தான், நம்முடைய திராவிட மாடல் அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்குகிறது. படிப்பதற்காக அல்லது வேலைக்காக பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிக முக்கியமானது. 17 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பெண்களுடைய சிரமத்தை குறைக்கக் கூடியத் திட்டம் அது. காலையிலே எழுந்து வேலைக்கு செல்லக் கூடிய பெண்கள், தங்கள் குழந்தைகளுக்கு டிபன் சமைச்சு வச்சுட்டு போறது எவ்வளவு சிரமம். அந்த சிரமத்தை இந்த திட்டம் போக்கியிருக்கிறது. இதுவரை நமது கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையானது என்று சொல்லக் கூடிய திட்டம் தான் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம். இந்த திட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் வைத்திருக்கும் பெயர் தான் இதிலே முக்கியமானது. இந்த திட்டம் மகளிருக்கான உரிமை என்பதால், இதற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று பெயர் வைத்துள்ளார்கள். பெண்களுடைய உழைப்புக்கு ஓர் அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். உங்களுடைய மகனாக, சகோதரனா இருந்து இதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெண்கள் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல் பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போது தான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும். பெண்கள் மொபைல் பயன்படுத்துகிறீர்கள். உங்களுக்கு நிறைய செய்திகள் வரும். அப்படி வருகிற செய்திகள் உண்மையா பொய்யா என்று நீங்கள் ஆராய்ந்து அதனை மற்றவர்களுக்கு ஷேர் செய்ய வேண்டும். இப்போது, உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீதம் பெண்கள் வந்திருக்கிறார்கள். அதனால் தான் தமிழ்நாட்டில் உள்ள மேயர், நகராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ஒன்றியக்குழு தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர் ஆகிய பதவிகளில் 50 சதவீதம் பேர் பெண்களாக உள்ளனர். இந்த சாதனையை நடத்திக் காட்டியது நம் திராவிட மாடல் அரசு.

இந்த நேரத்தில் மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் சொன்னது தான். மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காகவும் பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே, மகளிர் நிறைய படிக்க வேண்டும், முற்போக்காக சிந்திக்க வேண்டும். அப்போது தான் ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமும் முன்னேற முடியும். ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள்.

எனவே, பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையப் போகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பயனாளிகள் மற்றும் பிற துறைகளின் பயனாளிகளாக இங்கு வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்தையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன். கழக அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்ல நீங்கள் ஒவ்வொருவரும் தூதுவர்களாக மாறிட வேண்டும்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்.மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர்.பி.எம்.சரவணன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலர்.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர்.தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர். கே.ஆர்.ராஜு மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர்.டி.பி.எம். மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

---

### தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு

*சென்னை,அக்.30*

தீபாவளி பண்டிகையை யொட்டி பொதுமக்களின் வசதிக்காக 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்து துறை தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை யொட்டி சென்னை, கோவை, பெங்களூரு உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் பணி, படிப்பு நிமித்தமாக தங்கியிருப்போர், தொழில் புரிவோர் என லட்சக்கணக்கானோர் சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொள்வர். அதன்படி, பயணிகளின் வசதிக்கேற்ப தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கபடுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டு தீபாவளியை ஒட்டி, சிறப்புப் பேருந்துகள் இயக்குவது தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது. இக்கூட்டத்தில், போக்குவரத்து துறை செயலர் பணீந்திர ரெட்டி, சிறப்புச் செயலாளர் வெங்கடேஷ். ஆணையர் சண்முக சுந்தரம், காவல் துறை உயர் அதிகாரிகள், அரசு அதிகாரிகள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்திற்கு பிறகு இந்தாண்டுக்கான தீபாவளி சிறப்பு பேருந்துகள் இயக்கம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் படி. நவம்பர் 9ம் தேதி முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப் பட உள்ளன. அந்தவகையில், சென்னையில் இருந்து நவம்பர் 9 ம் தேதி 3,465 பேருந்துகளும், 10 ம் தேதி 3,395 பேருந்துகளும், 11ம் தேதி 3,515 பேருந்துகள் என 10,975 பேருந்துகள் இயக்கப் படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பிற ஊர்களுக்கு செல்ல 5,920 சிறப்பு பேருந்துகள் இயக்கப் பட உள்ளன. ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

தீபாவளி பண்டிகை முடிந்து நவம்பர் 13 ம் தேதி முதல் 15ம் தேதி வரை 13,292 தினசரி பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகள் இயக்கப் படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சென்னையில் மட்டும் 6 முக்கிய இடங்களில் இருந்து ஏற்கனவே பண்டிகை காலங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டன. அதைப்போல மீண்டும் அங்கிருந்து இயக்க முடிவு செய்யப்பட்டது. அவை, கோயம்பேடு



பேருந்து நிலையம், பூந்தமல்லி பேருந்து நிலையம், தாம்பரம் நிலையம் பேருந்து நிலையம், தாம்பரம் ரயில் நிலையம், கே.கே.நகர், மாதவரம் பேருந்து நிலையம் ஆகும்.

மாதவரம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து ரெட் ஹில்ஸ் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக் கோட்டை வழியாக ஆந்திரா செல்லும் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

கலைஞர் நகர் (கே.கே. நகர்) பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் செல்லும் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

தாம்பரம் மெப்ஸ் அண்ணா பேருந்து நிலையத்தில் இருந்து திண்டிவனம், விக்கிரவாண்டி, பண்ருட்டி, கும்பகோணம் ஆகிய பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

திண்டிவனம் வழியாக திருவண்ணாமலை, போளூர், பண்ருட்டி, நெய்வேலி, வடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புதுச்சேரி, கடலூர் செல்லும் பேருந்துகள் தாம்பரம் ரயில்வே நிலைய பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பூந்தமல்லி பேருந்து நிலையத்தில் இருந்து வேலூர், ஆரணி, ஆற்காடு. திருப்ப த்தூர், காஞ்சிபுரம், செய்யாறு, ஒசூர், திருத்தணி, திருப்பதி ஆகிய இடங்களுக்கு இயக்கப்பட உள்ளன.

கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து மயிலாடுதுறை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், , நாகர்கோவில், மார்த் தாண்டம், கன்னியாகுமரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், திண்டுக்கல், விருதுநகர், திருப்பூர், பொள்ளாச்சி, ஈரோடு, ராமநாதபுரம், சேலம், கோயம்புத்தூர், பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது

---

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! திருவள்ளூரில் நவம்பர் 5 அன்று

# சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, டெல்டா மண்டல கூட்டம் ஜுலை 26 அன்று திருச்சியிலும் - தென்மண்டலக் கூட்டம் ஆகஸ்ட் 17 அன்று இராமநாதபுரத்திலும் - மேற்கு மண்டலக் கூட்டம் செப்டம்பர் 24 அன்று காங்கேயத்திலும் - வடக்கு மண்டலக் கூட்டம் அக்டோபர் 22 அன்று திருவண்ணாமலையிலும் என இதுவரை 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு 20-க்கும் மேற்பட்ட கழகத்தின் சிறந்த சொற்பொழிவாளர்களைக் கொண்டு கொள்கை வழிகாட்டுதலும் தேர்தல் பயிற்சியும் வழங்கப்பட்டு, 4 மண்டலங்களிலும் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து.

நிறைவாக, **சென்னை மண்டலத்திற்குட்பட்ட** மாவட்டங்களின் 12 ஆயிரம் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பங்கேற்கும் "**வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறைக் கூட்டம்**" வருகிற **நவம்பர் 5 அன்று திருவள்ளூரில் உள்ள கலைஞர் திடலில்** தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

சென்னை மண்டலத்துக்கு உட்பட்ட பின்வரும் 11 கழக மாவட்டங்களின், மாவட்டச் செயலாளர்கள், தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**1.திருவள்ளூர் கிழக்கு**
**2.திருவள்ளூர் மத்திய**
**3. திருவள்ளூர் மேற்கு**
**4.சென்னை கிழக்கு**
**5.சென்னை வடகிழக்கு**
**6.சென்னை வடக்கு**
**7.சென்னை மேற்கு**
**8.சென்னை தெற்கு**
**9.சென்னை தென்மேற்கு**
**10.காஞ்சிபுரம் வடக்கு**
**11.காஞ்சிபுரம் தெற்கு**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தொழில் முகமாகத் திகழ்கிறது டி.வி.எஸ். நிறுவனம் – உகந்த சூழ்நிலை காரணமாக

# தமிழ்நாடு தொழில் துறையில் வேகமாக முன்னேறி வருகிறது!

## டி.எஸ்.சீனிவாசன் நூற்றாண்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2023) சென்னையில் நடைபெற்ற டிவிஎஸ் குழுமத்தின் டி.எஸ். சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விழாவில், அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, முனைவர் பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., டிவிஎஸ் குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், மாநில திட்டக்குழு உறுப்பினர் மல்லிகா சீனிவாசன், தி இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், பாரதிய வித்யா பவன் தலைவர் கிருஷ்ணராஜ் வானவராயர், செயல் இயக்குநர் லட்சுமணன், தொழிற்சங்க தலைவர் குப்புசாமி மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை, அக்.30 –

**தமிழ்நாட்டின் தொழில் முகமாக டி.வி.எஸ். நிறுவனம் திகழ்கிறது என்றும், உகந்த சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் தொழில் துறையில் தமிழ்நாடு அதி வேகமாக முன்னேறி வருகிறது என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் டி.எஸ்.சீனிவாசன் நூற்றாண்டு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2023) சென்னையில் நடைபெற்ற டிவிஎஸ் குழுமத்தின் டி.எஸ். சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு :

TVS என்ற மூன்றெழுத்து நிறுவனத்தை DMK என்ற மூன்றெழுத்தின் தலைவராக வாழ்த்துவதற்காக நான் வந்திருக்கிறேன்!

எனது தந்தை என்பதைவிட நான் தலைவராக போற்றக்கூடிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இதுதான் நூற்றாண்டு. வேணு சீனிவாசன் அவர்களுடைய தந்தை டி.வி.எஸ். குழுமங்களின் முக்கியத் தூணாக விளங்கிய மரியாதைக்குரிய சீனிவாசன் அவர்களுக்கும் இதுதான் நூற்றாண்டு. தமிழ்நாட்டின் தொழில்துறை அடையாளங்களில் TVS முக்கியமானது என்பதை யாரும் மறக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது.

TVS நிறுவனத்தை பற்றி நான் உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டினுடைய தொழில் முகத்தை காட்ட வேண்டும் என்றால் அதற்கு ஒரு முகமாக – டி.வி.எஸ். நிறுவனத்தைக் காட்டலாம். இதற்கு அடித்தளம் அமைத்தவர் தொழில் மேதைகளில் ஒருவரான டி.வி.சுந்தரம் அவர்கள்.

### திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம்!

இன்றைக்கு லட்சக்கணக்கான இரு சக்கர வாகனங்கள் எத்தனை வந்தாலும் ஏழைகளுக்கான வாகனமாக இருந்தது TVS 50 வாகனம் தான். ஏழை எளிய சிறு வியாபாரிகளின் வாழ்க்கையில் விளக்கேற்றிய ஒளிவிளக்கு அந்த வாகனம். தென் மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களுக்குள் முதலில் சென்ற வாகனம் TVS தான். இதை உருவாக்கியவர் திருக்குறுங்குடி வெங்கராம் சுந்தரம் அவர்கள். டி.வி.சுந்தரம் குரூப்ஸ் நிறுவனங்களை உருவாக்கிய தொழில்துறை மேதை அவர். வழக்கறிஞராக இருந்து தொழிலதிபர் ஆனவர் அவர். அந்தக் காலத்தில் திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம் என்பது மிகப்பெரிய அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் சொற்பொழிவாற்றும் இடமாக இருந்தது. இப்போதும் இந்த அமைப்பு நூலகத்துடன் இயங்கி கொண்டு வருகிறது.

அந்த திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கத்தில் உரையாற்ற வந்த வழக்கறிஞர் நார்டன் அவர்களது உரையைக் கேட்டு தொழில் துறையில் இறங்கினார் டி.வி.சுந்தரம் அவர்கள். 1912ஆம் ஆண்டு மதுரையை மையமாக கொண்டு பேருந்து சேவையை தொடங்கினார். தஞ்சாவூர் புதுக்கோட்டை தான் அவர் முதன்முதலாக பேருந்து இயக்கிய வழித்தடம். அந்தக் காலத்தில் சரியான சாலை வசதிகள் இல்லை. அதனால் சாலைகள் போடுகிற ஒப்பந்தத்தையும் எடுத்தார். சாலைகளில் இரும்பு ஆணிகள், மாட்டு லாடம் அதிகம் கிடக்கும். இதனால் பேருந்து டயர் பஞ்சர் ஆகும். எனவே இதை முன்கூட்டியே எடுக்க காந்த வாகனத்தையும் வைத்திருந்தார்.

இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்தில் பெட்ரோல் தட்டுப்பாடு வந்தது. உடனே கரிவாயு மூலம் வாகனத்தை இயக்குகிற பங்க் வைத்தார். பேருந்து இயக்குவது பாகங்களை தயாரிப்பது வாகனங்களை உருவாக்குவது போன்ற கிளைத் தொழில்கள் எல்லாவற்றையும் தொடங்கியதால்தான், இன்றைக்கு 80 நாடுகளில் டி.வி.எஸ் நிறுவனம் செயல்பட்டு கொண்டு இருக்கிறது.

இத்தகைய மாபெரும் மனிதர், தன்னுடைய வாரிசுகள் எல்லோரையும் தொழில் துறையில் ஈடுபடுத்தி வளர்த்திருக்கிறார். தாத்தா மகன் பேரன் – கொள்ளுப்பேரன் என்று டி.வி.எஸ்ன்ற மூன்றெழுத்தை காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

### தொழிலில் புதுமை!

டி.வி.சுந்தரம் அவர்களை போலவே அவருடைய மகன் சீனிவாசனும் இந்த தொழிலில் புதுமைகளை புகுத்தி விரிவுபடுத்தினார். சீனிவாசன் அவர்களின் மகன் வேணு சீனிவாசன் அவர்களும் இதை இன்னும் சிறப்பாக செய்துகொண்டு வருகிறார்.

வாரிசுகள் திறமைசாலிகளாக இருந்தால் எதையும் காப்பாற்றலாம். அதற்கு அடையாளமாக டி.வி.எஸ் நிறுவனம் உயர்ந்து நிற்கிறது. வாரிசு என்று சொல்வதால் ஏதோ அரசியல் பேசுவதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. வாரிசுகள் திறமைசாலிகளாக இருந்தால் எதையும் சிறப்பாக செய்து வெற்றிக் கொடி நாட்டலாம் என்றுதான் சொன்னேன்.

இன்றைக்கு நாம் நூற்றாண்டு விழாவை கொண்டாடி வரக் கூடிய சீனிவாசன் அவர்கள், இந்த டி.வி.எஸ் நிறுவனத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்றதில் முக்கியப் பங்காற்றியவர். தொழிலதிபர்களில் பலவகை உண்டு. சிலருக்கு நிர்வாகத் திறன் இருக்கும். சிலருக்கு தொழில் நுட்ப அறிவு அதிகமாக இருக்கும். சிலர் நேர காலம் பார்க்காமல் உழைப்பார்கள். சிலர் புதுமைகளை புகுத்துவார்கள். சிலர் தொழிலாளர்களே முக்கியம் என்று நினைப்பார்கள். இவை அனைத்தையும் ஒரு சேரப் பெற்றவராக டி.எஸ்.சீனிவாசன் அவர்கள் இருந்தார். இதுதான் அவருடைய சிறப்பு. வெற்றிக்கும் காரணம்.

தனது தந்தை நிர்மாணித்துக் கொடுத்த தொழிலை அப்படியே காப்பாற்றுபவராக மட்டும் இல்லாமல் அதை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செலுத்துபவராவும் டி.எஸ்.சீனிவாசன் அவர்கள் இருந்தார். அப்பாவினுடைய நிறுவனமாக இருந்தாலும் அவர் இதில் முதன் முதலாக சர்வீஸ் மேனேஜர் என்ற பொறுப்பில்தான் சேர்ந்தார். வாழ்க்கையின் இறுதி வரைக்கும் சர்வீஸ் முதலாளியாக செயல்பட்டிருக்கிறார் டி.எஸ். சீனிவாசன் அவர்கள்.

ஒரு இயந்திரத்தை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்கான கையேட்டை அவர் தயாரித்தாகவும் – அதை ஒருவர் படித்தாலே சிறந்த தொழிலதிபர் ஆகிடலாம் என்றும் படித்தபோது ஆச்சரியமாக இருந்தது. ஏன் இதை சொல்கிறேன் என்றால் எல்லோரும் தங்களுக்குத் தெரிந்த தொழில் ரகசியத்தை வெளியில் சொல்லி விடமாட்டார்கள். ஆனால், எல்லோருக்கும் கற்பிக்கக் கூடியவராக டி.எஸ். சீனிவாசன் அவர்கள் இருந்திருக்கார்.

சேவைத் துறை நிறுவனமாக இருந்த டி.வி.எஸ். நிறுவனத்தை உற்பத்தித் துறை நிறுவனமாக மாற்றியதில் பெரும்பங்கு டி.எஸ். சீனிவாசன் அவர்களை சேரும். சென்னை பாடி பகுதியில், 300 ஏக்கர் நிலத்தை வாங்கியபோது, இவ்வளவு பெரிய நிலம் எதற்கு என்று அப்போது சிலர் தடுத்திருக்கிறார்கள். ஆனால், 25 ஆண்டுகள் கழித்து தேவைப்படும் என்று தொலைநோக்குப் பார்வையோடு சொல்லி இருக்கிறார் டி.எஸ்.சீனிவாசன் அவர்கள்.

சைக்கிள் போல ஒவ்வொரு வீட்டிலும் மொபெட் இருக்க வேண்டும் என்று சொல்லி – அதை சாதித்துக் காட்டியவர் அவர்தான். உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையிலேயும் ஓசூர் தொழிற்சாலையை உருவாக்க கடுமையாக உழைத்தார். துணிச்சலாக ரிஸ்க் எடுக்கக் கூடியவர்.

தொழிலாளர்களோடு தொழிலாளராக இருந்திருக்கார். அவர்களின் நலனில் அக்கறை கொண்டவராக இருந்திருக்கார். இந்த சிந்தனை என்பது மரியாதைக்குரிய டி.வி.சுந்தரம் அவர்கள் மூலமாக வந்த சிந்தனை. காந்தியவாதியாக வாழ்ந்தவர் டி.வி.சுந்தரம் அவர்கள். முற்போக்கு எண்ணம் கொண்டவராக இருந்தார். இளம் வயதில் கணவரை இழந்த தன்னுடைய மகளுக்கு அந்தக் காலத்திலேயே மறுமணம் செய்து வைத்தார். தலைசிறந்த மருத்துவராக சட்டமன்ற உறுப்பினராக பிரதமர் நேரு அவர்களின் அமைச்சரவையில் ஒன்றிய துணை அமைச்சராவும் தி.சு.சௌந்திரம் அவர்கள் உயர்ந்தார்.

இப்போதும் சிலர் குழந்தை திருமணத்தை பச்சையாக ஆதரித்தும் மறுமணம் செய்வதாக இருந்தால் அதற்கு மந்திரம் கிடையாது என்றும் சொல்கிற காலத்திலே 60 ஆண்டுகளுக்கு முன்னரே முற்போக்காக சிந்தித்தவர் டி.வி.சுந்தரம் அவர்கள்.

இங்கே ஒரு புத்தகம் டி.வி.எஸ் சார்பில் வெளியிடப்பட்டு இருக்கிறது. டி.வி.எஸ் செய்த சாதனைகளில் இதுவரை வெளியில் தெரியாத ஒரு சாதனை இது. தொழில் உற்பத்தி மற்றும் பெருக்கத்தின் வழி, வருமானத்தையும் வளர்ச்சியையும் மட்டும் பெருக்காமல், ஒரு படி மேல போய், பல்லுயிரின் இருப்புக்கும் பெருக்கத்துக்குமே தொழில்துறை பயன்பட முடியும் என்று TVS நிறுவனம் காட்டியிருக்கிறது. அதுதான் இந்த புத்தகம்.

### 2500 கிராமங்கள் தத்தெடுப்பு!

தமிழ்நாட்டின் தொழில்நகரமான ஓசூரில் TVS இந்த உதாரணத்தை தொடங்கியிருக்கிறது. அங்கே நிறுவனம் இயங்கத் தொடங்கிய 1976கால கட்டத்தில் ஒரு குளத்தை உருவாக்கி இருக்கிறார்கள். பறவைகள் வந்திருக்கிறது. நீர்நிலைகளில் மட்டுமே வசிக்கிற Painted Stork எனப்படும் நாரைகளும் வரத் தொடங்கி இருக்கிறது. தொழிலைப் பெருக்க வந்தவர்கள், பல்லுயிர் பெருக மரங்களை நட்டிருக்கிறார்கள். இருபது ஆண்டுகளில் ஓசூரில் ஒரு காட்டையே TVS உருவாக்கியிருக்கிறார்கள். அதை The Painted Stork என்கிற இந்த புத்தகத்தில் ஆவணப்படுத்தி இருக்கிறார்கள்.

SST அறக்கட்டளை மூலமாக 2500க்கும் மேற்பட்ட கிராமங்களை தத்தெடுத்து அந்தக் கிராமங்களை மேம்படுத்தி கொண்டு வருகிறார் வேணு சீனிவாசன் அவர்கள்.

* பெண்கள் குழந்தைகள் வளர்ச்சி
* நீர் பாதுகாப்பு
* வேளாண்மை
* கால்நடை வளர்ச்சி

சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய பணிகளை நீங்கள் செய்து கொண்டு வருகிறீர்கள்.

இதே போன்ற அறக்கட்டளைகளை நிறுவி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழில் நிறுவனங்களும் கிராமப்புற மேம்பாட்டுக்கு பங்களிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

'நம்ம ஊர் பள்ளி' என்கிற மகத்தான திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். சமூக சேவை எண்ணம் கொண்டவர்களுடைய முயற்சியையும் இணைத்துக் கொண்டு அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தான் இந்த திட்டத்தின் நோக்கம். இதன் மூலமாக, தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளை தரம் உயர்த்த வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். நம்முடைய வேணு சீனிவாசன் அவர்களும், செஸ் விளையாட்டு வீரர் விஸ்வநாத் ஆனந்த் அவர்களும் இந்த தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். திட்டத்தை நான் தொடங்கிய முதல் நாளே ஐம்பது கோடி ரூபாய் மதிப்பிலும், இப்போது 158 கோடி ரூபாய் மதிப்பிலும் கொடைகள் வந்திருக்கிறது.

### இயற்கை பேரிடர் காலங்களில் உதவி!

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் வெளியில் இருந்து கிடைத்த முதல் பாராட்டு திரு. வேணு சீனிவாசன் அவர்களுடைய பாராட்டு தான். அதை அவர் மறந்திருந்தாலும் நான் மறக்கவில்லை.

இயற்கைப் பேரிடர் காலங்களில் உதவி செய்கின்ற நிறுவனமாக டி.வி.எஸ். இயங்கி வருகிறது. கொரோனா காலத்திலும் நிறைய உதவிகள் செய்திருக்கிறீர்கள். சீனிவாசன் சர்வீஸ் டிரஸ்ட் என்ற பொருத்தமான பெயரை வைத்திருக்கிறீர்கள். அவரே சர்வீஸின் அடையாளமாக இருக்கிறார்.

டி.எஸ். சீனிவாசன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் அவரது தொழில் முயற்சிகளை அவரது சமூக நோக்கங்களை அப்படியே பின்பற்றி வரும் அருமை நண்பர் வேணு சீனிவாசன் அவர்களை மனதார பாராட்டுகிறேன். நூற்றாண்டு விழா நாயகர் சீனிவாசன் புகழ் வாழ்க வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு அனைத்துத் துறையிலும் முன்னேறி வருகிறது. அதிலும் குறிப்பாக, தொழில் துறையில் அதிவேக முன்னேற்றத்தை கண்டு வருகிறது. ஏராளமான புதிய புதிய தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். தமிழ்நாடு அமைதி மிகு மாநிலமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், ஏறத்தாழ 10 விழுக்காடு அளவுக்குத் தமிழ்நாட்டின் பங்களிப்பு இருக்கிறது.

2024 ஜனவரி மாதம் நாங்கள் நடத்த இருக்கிற உலக முதலீட்டாளர்கள் மாநாடு இதுவரை இப்படி எங்கேயும் நடந்ததில்லை என்று புகழப்படுகிற அளவிற்கு நடத்த வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். டி.வி.எஸ். போன்ற நிறுவனங்கள் இதில் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரை, அரசுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்பட்டு வளர்ச்சியை அடைய வேண்டும். டி.வி.எஸ் போன்ற புதிய புதிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உருவாக வேண்டும். நூற்றாண்டு விழா நாயகர் சீனிவாசனைப் போன்ற தொழில் மேதைகள் உருவாக வேண்டும். வேணு சீனிவாசன் போன்ற தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டுக்குத் தேவை. அதற்கு இது போன்ற விழாக்கள் ஊக்கமளிப்பதாக அமையும் என்பதைச் சொல்லி இந்த அளவில் நான் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



தி.மு.க. அயலக அணி மலேசிய அமைப்பாளரும், சமூக சேவகருமான ஃபிர்தவ்ஸ் கானுக்கு மலேசியாவிலிருந்து வெளிவரும் 'நம்பிக்கை' என்கிற நாளேடு இந்தாண்டு சிறந்த சமூக சேவகருக்கான விருதினை வழங்கி கவுரவித்துள்ளது. விழாவில் டத்தோ வீரா ஷாஹுல் ஹமீத், பத்திரிகையின் நிறுவனப் டத்தோ ஸ்ரீ இக்பால், ஜெய்லானி, காசிம், கஜ்ஜாலி, ஜெகன், ரஃபிக், அப்துல்காதர், ஃபிர்தவ்ஸ் , அஜின்ஷா உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

## தி.மு.க. அயலக அணி மலேசிய அமைப்பாளருக்கு 'நம்பிக்கை' விருது!

கோலாலம்பூர், அக். 30 –

மலேசியாவில் இருந்து வெளிவரும் 'நம்பிக்கை' என்கிற தமிழ் நாளேடு வருடாவருடம் தமிழர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளது.

இந்த வருடம், சமூக சேவைக்கான விருது தி.மு.க. அயலக அணி மலேசிய அமைப்பாளரும், வெளிநாடு வாழ் தமிழர் நல அமைப்பின் தலைவருமான ஃபிர்தவ்ஸ் கான் அவர்களுக்கு அவரின் சேவையை பாராட்டி விருது வழங்கப்பட்டது.

வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான தேவையை பூர்த்தி செய்தல், அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு துணை நின்றல், தமிழர்கள் யாரேனும் இறந்துவிடின், அவர்களின் உடலை பத்திரமாக தாய்நாட்டிற்கு அனுப்பி வைத்தல் போன்ற சமூக சேவைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

விழாவில், டத்தோ வீரா ஷாஹூல் ஹமீத், நம்பிக்கை பத்திரிக்கையின் நிறுவனர் டத்தோ ஸ்ரீ இக்பால், மற்றும் NRTIA மலேசிய நிர்வாகிகள் ஜெய்லானி, காசிம், கஜ்ஜாலி, ஜெகன், ரஃபிக், அப்துல் காதர், ஃபிர்தவ்ஸ், அஜின் ஷா ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

கருப்புசிகப்பு உடை அணிந்து விருதை பெற்றுக்கொண்டது மேலும் சிறப்பாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.

நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# கல்லூரி - பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமை!

நெல்லை, அக். 30 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் தி.மு.க.மாணவர் அணி சார்பில் இராதாபுரம் தொகுதி வள்ளியூர் நேரு நர்சிங் கல்லூரியில் வைத்து மாநில அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர், மாணவிகளுக்கான பேச்சு போட்டி மற்றும் கட்டுரை போட்டி நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்று போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர், மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் மாணவர் அணி சார்பில் வள்ளியூர் நேரு நர்சிங் கல்லூரியில் வைத்து மாநில அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர், மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டி நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்

தலைமையில் மாவட்ட அவை தலைவர் கிரகாம் பெல்,இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன்,வள்ளியூர் பேரூர் கழக செயலாளர் சேதுராமலிங்கம்,மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பிரபாகர், சீனிதாஸ் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது. நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் லட்சுமணன் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பங்கேற்று போட்டிகளை துவக்கி வைத்து பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் அடுக்கடுக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.ஒரு ஆட்சி என்பது மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவது மட்டுமல்ல.நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மண்ணில் வாழ்கின்ற பல்லுயிர்கள், விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள் என ஒட்டுமொத்த உயிரினங்களுக்கும் பாதுகாப்பு அரணாக இருக்கிறார். பசுமை தமிழகம் உருவாக நடவடிக்கைகள், பசுமை பள்ளிகள்,மஞ்சள் பை என அடுக்கடுக் கான திட்டங்களை தந்துள்ளார்.

பெண்கள் உயர்கல்வி படிப்பதற்காக மாதம் ரூபாய் 1000 வழங்கும் திட்டம் முதல் இன்று தி.மு.க அரசு பொறுப்பேற்று இரண்டரை ஆண்டு காலத்தில் 31 கலை அறிவியல் கல்லூரியை உருவாக்கி தந்தவர். இன்றைய முதலமைச்சர் அவர்கள்.பள்ளிக் கல்வியின் பொற்காலம் காமராஜர் காலம்.கல்லூரி கல்லூரியின் பொற்காலம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலம்.உயர்கல்வியினுடைய பொற்காலம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி காலம். அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவ படிப்புக்கு செல்ல 7.5 சதவீதம் இட ஒதுக்கீடு உள்ள நிலையில் பொறியியல் உள்ளிட்ட அனைத்து வகையான உயர்கல்விக்கு செல்ல அரசு பள்ளி பயிலும் மாணவர்களுக்கு 7.5 சதவீதம் வழங்கியவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.அடித்தட்டு மக்களைப் பற்றி சிந்திக்கின்ற ஆட்சி திராவிட மாடல் ஆட்சி,தமிழகத்தில் நடந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மெய்யநாதன் பேசினார்.

நிகழ்வில் கழக செய்தி தொடர்பு மாநில இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ்,நாங்குநேரி ஒன்றிய செயலாளர்கள் ஆரோக்கிய எட்வின், சுடலைக்கண்ணு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணிஉள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ராஜதுரை நன்றியுரை யாற்றினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதி அளித்ததற்கு நன்றி!

# ரூ.122.5 கோடியில் 6 புதிய கிடங்குகள் - சேமிப்பு தளங்கள்!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!



சென்னை, அக்.30-

முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருங்குடி மக்களால் விளைவிக்கப்பட்ட நெல்மணிகளைப் பாதுகாக்க 122.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.32 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள் மற்றும் 40 நவீன நெல் சேமிப்புத் தளங்கள் கட்டுமானப் பணிகளைத் துவக்கிட அனுமதி ஆணை அளித்துள்ளார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொன்விழா கண்டு கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் நேரத்தில் தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்து, சேமித்து வழங்கும் பணிகளோடு நெல் கொள்முதல் பணிகளையும் தொடர்ந்து சிறப்பாகச் செய்து வருகிறது.

நெல் கொள்முதலின் போது ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு 238 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்ததால் 18 இடங்களில் 2,86,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. உணவு தானியங்களைச் சேமிக்க 12 வட்டங்களில் 28 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவில் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 கிடங்குகள் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டுள்ளன. இதன் அடுத்த கட்டமாக, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் கடலூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் 65,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்ட 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய டெல்டா அல்லாத மாவட்டங்களில் 52,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்ட 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், உணவுப் பொருள்களின் சேமிப்புக் கொள்ளளவினை அதிகப்படுத்துவதற்காக மொத்தம் 6,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் திருவள்ளூர் மாவட்டத்தில் இராமகிருஷ்ணராஜபேட்டையிலும் மதுரை மாவட்டத்தில் மதுரை மேற்கிலும், விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டையிலும் 3 புதிய சேமிப்புக் கிடங்குகள் கட்ட 12 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், காஞ்சிபுரம், மதுரை, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மொத்தம் 8,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட மூன்று புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள் கட்ட 15.5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், ஆக மொத்தம் 122.5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு முதலமைச்சர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தால் 1.32 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் சேமிக்கப்படுவதோடு, தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், மதுரை, நீலகிரி மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள சுமார் 10.5 இலட்சம் எண்ணிக்கையிலான நெல் விவசாயிகளும் பயனடைவதோடு நெல்லும் பாதுகாப்பாகச் சேமிக்கப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் புதிய திட்டங்களுக்கு அனுமதி அளித்து அதன் வழியாகத் தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினையும் மக்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவதையும் உறுதி செய்திட தாயுள்ளத்தோடு உதவிடும் முதலமைச்சர் அவர்களுக்கு உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தொ.மு.ச. தொழிலாளர்கள்

# மதுரையில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

## 20சதவீத போனஸ் அறிவித்த முதல்வருக்கு நன்றி பாராட்டு!

மதுரை, அக். 30 -

மதுரையில் தமிழ்நாடு மாநில வாணிப கழக பணியாளர் முன்னேற்ற சங்கத்தின் டாஸ்மாக் தொமுச பிரிவின் சார்பில் பொதுத் துறை நிறுவன பணியாளர்களுக்கு 20சதவீத போனஸ் வழங்கி தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் வழங்கிய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி பாராட்டு தெரிவித்து டாஸ்மாக் தொமுச பொதுச் செயலாளர் சிவப்பிரகாசம் தலைமையில் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள் அதன் விபரம்

பொதுத்துறை நிறுவனங்களில் அரசுக்கு அதிக லாபம் தரக்கூடிய டாஸ்மாக் நிறுவன ஊழியர்கள் பணியாற்றக்கூடிய தொழிலாளர் குடும்பங்களின் சூழ்நிலை கருத்தில் கொண்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 20சதவீத போனஸ் வழங்கி மகிழ்வித்தார்.

அதன் பின் வந்த அதிமுக அரசு டாஸ்மாக் தொழிலாளர்கள் வஞ்சிக்கும் வகையில் 10சதவீத போனசாக அதனை குறைத்தது, இந்த செயல்பாட்டை பலரும் கண்டித்த நிலையில் அதிமுக அரசு பொறுட்படுத்தவில்லை

ஆனால் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களிடம் தொமுச சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டதை தாயுள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு தொழிலாளர் குடும்ப ங்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் 20 சதவீதம் போனஸ் வழங்கி மகிழ்வித்தார். தலைவர், முதல்வரின் இந்த அறிவிப்பு எல்லோர் குடும்பத்திற்கும் மறக்க முடியாத மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நல்லதொரு அறிவிப்பை வரவேற்கும் வகையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இதற்கு உறுதுணையாக இருந்த கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் முத்துசாமி அவர்களுக்கும், உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயிர தீர்வைத் துறை செயலர், டாஸ்மாக் மேலாண்மை இயக்குனர் மற்றும்

தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி., அவர்களுக்கும், பேரவை பொருளாளர் கி.நடராசன் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து, அதனை கொண்டாடும் வகையில் மதுரை அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு தொமுச டாஸ்மாக் மாநில பொதுச் செயலாளர் எம்.சிவப்பிரகாசம் தலைமையிலும், மாவட்டத் தலைவர் ஜி. ஜெகநாதன், பொருளாளர் எஸ்.தங்கம், மாவட்ட கவுன்சில் துணைச் செயலாளர் அருள்மொழிச் செல்வன், மாவட்ட மற்றும் தாலுகா நிர்வாகிகள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்று பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி தமிழ்நாடு அரசின் சாதனையை எடுத்துக் கூறி முதல்வருக்கு நன்றி பாராட்டினார்கள்.

வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் நிதி உதவி

# 5 ஆயிரம் தாய்மார்களுக்கு ரூ.50 லட்சம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியம் தகவல்!



சென்னை, அக்.29-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் தாய் சேய் குறைபாடு உள்ள கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்திட வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் நிதி உதவி திட்டம் 01.07.2023 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டு சிறந்த செயல்பாட்டில் உள்ளது. அதன் தொடர்ச்சியாக நேற்று (28.10.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில், 5000 மகப்பேறு தாய்மார்களுக்கு ரூ. 50 இலட்சம் நிதியுதவியினை நேரடி பணப் பரிவர்த்தனை மூலம் தொடங்கி வைத்து, அதில் சிறப்பாக செயல்பட்ட மாவட்டங்களின் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகளை பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

**நடப்போம் நலம் பெறுவோம் (Health Walk) திட்டம்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 04.11.2023 அன்று முதலமைச்சர் அவர்களின் மூலம் செயல்படுத்தப்பட இருக்கின்ற "நடப்போம் நலம் பெறுவோம்" (Health Walk) திட்டம் நடைமுறை படுத்துவது குறித்து அய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே தமிழ்நாட்டில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரகம் காப்போம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் என்று முக்கியமான திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளது. இது போன்ற ஒரு சிறப்பு திட்டமாக நடப்போம் நலம் பெறுவோம் (Health Walk) திட்டம் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

ரூ.38.20 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு திட்ட ஆணையம் மூலமாக 01.07.2023 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில், தாய் சேய் குறைபாடு உள்ள 74,400 கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளின், ஊட்டச்சத்தை மேம்படுத்திட வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் நிதி உதவி வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில், 23 வட்டாரங்களில், நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு, இரத்த சோகை உள்ள தாய்மார்களுக்கு பயன் அளிக்கும் வகையில் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தில் முதல் தவணையாக 4 முதல் 5 மாதம் கர்ப்பம் தரித்த தாய்மார்களுக்கு ரூ.1000, 2வது தவணையாக 5 முதல் 6 மாதம் கர்ப்பம் தரித்த தாய்மார்களுக்கு ரூ.1000, மூன்றாம் தவனையாக 9 மாதம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.1000 தரப்படுகிறது. அதன்பிறகு குழந்தை பிறந்து 6 வது மாதம் ரூ.500, 12வது மாதம் 5வது தவணை தொகை, 18வது மாதம் 6வது தவணை தொகை, 24வது மாதம் 7வது தவணை தொகை ரூ.500 வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ரூ.5000 வழங்கப்படுகிறது. திட்டம் தொடங்கிய நாள்முதல் இதுவரை 8,163 தாய்மார்கள் நிதி உதவி பெற்று பயனடைந்துள்ளனர். இன்று (28.10.2023) 5,294 தாய்மார்களுக்கு ரூ.50 இலட்சம் நிதியுதவியினை நேரடி பணப் பரிவர்த்தனை மூலம் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவது தொடர்பாக அனைத்து மாவட்ட துணை இயக்குநர்களுடனான கூட்டம் இன்று நடைபெற்றது.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிகிச்சை அளிப்பதில் இதுவரை காலதாமதம் ஏற்படுவதாக புகார்கள் பெறப்படவில்லை. மேலும், இந்த திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பாக குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகளை கிடைக்கப் . பெற்றவுடன் முதலமைச்சர் அவர்களிடம் காண்பிக்கப்படும். காப்பீட்டுத் திட்டம் தொடர்பான புகார்கள் அந்தந்த மருத்துவமனையின் மருத்துவர்களிடம் தெரிவிக்கலாம், மேலும் இதற்காக கட்டணமில்லா எண் 1800 425 3993 என்ற எண்ணிற்கு 104 பொது புகார் எண்ணை தொடர்பு கொண்டு புகாரளிக்கலாம்.

**முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்**

முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் பங்களிப்புடன் வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் பங்களிப்பு ரூ.3,000/ வரை வழங்கப்பட்டு வருகிறது. மீதி உள்ள ரூ.15,000/இல் ரூ.2,000 மதிப்பில் பெட்டகமும், ரூ.13,000/ பணமாகவும் வழங்கப்படுகிறது. இதில் மொத்தம் 5 தவணைகளாக இந்த தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில் முதல் தவணை சுமார் 2 இலட்சம் பேருக்கு வழங்கப்படாமல் காலதாமதம் ஆவதால் இது தொடர்பாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்கள் டெல்லிக்கு சென்று ஒன்றிய அரசின் அலுவலர்களிடம் காலதாமதம் குறித்து தெரிவித்துள்ளார். இன்னும் ஒரு மாதம் காலத்திற்குள் இப்பிரச்சினை முடிவடைந்தவுடன் நிலுவையில் உள்ள ரூ.3,000/ தொகை வழங்கப்பட்டு விடும். ஒன்றிய அரசு தொகை ரூ.3000 மட்டுமே நிலுவையில் உள்ளது. மாநில அரசு வழங்கும் தொகை எதுவும் நிலுவையில் இல்லை.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள் நலனில் அக்கறை கொண்டு

# பல்வேறு வேலைவாய்ப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## ஆலங்குடியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை அக் 30

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (28.10.2023) அன்று துவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்கள், மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு சிறப்பான திட்டங்களையும், வேலைவாய்ப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டது. அந்தவகையில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் தொழில் துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 150க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளனர். அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கான பதிவு வழிகாட்டல், சுயதொழில், வங்கி கடன் உதவிகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து பிரத்தியேக அரங்கம் அமைத்து ஆலோசனை அளிக்கப்படுகிறது. மேலும், மாவட்டத்தில் உள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்துகொண்டு இலவச திறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.



இத்தனியார்துறை முகாமில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ. டிப்ளமோ, பி.இ, நர்சிங் படிப்புகள் போன்ற கல்வித்தகுதியுடைய 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களும் பங்கேற்று, தங்களது தகுதிகளுக்கேற்ப பணிநியமங்களை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே இளைஞர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் வேலைவாய்ப்பு முகாம்களை உரிய முறையில் பெற்று தங்களது வாழ்வின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார். இந்நிகழ்வில், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா , இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத்துறை) சந்திரன், ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் மு.ராசி முருகானந்தம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர்

வள்ளியம்மை தங்கமணி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது) மோ. மணிகண்டன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ) பெ. வேல்முருகன், உதவி திட்ட அலுவலர் கே.தில்லைமணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ். உலகநாதன், வட்டாட்சியர் பெரியநாயகி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கோகுலகிருஷ்ணன், ஆயிஷாராணி, ஸ்ரீதேவி அண்ணாத்துரை, டி.தங்கமணி. வெ.முத்துக் கிருஷ்ணன், குமார்(எ) துரைக்கண்ணு, ஆர்.வி.செல்வம், கே..எம்.சுப்பிரமணியன், ஆ.பழனிக்குமார், கே.சி. சிவக்குமார், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், கே.வி.சுப்பையா, உஷா செல்வம், வழக்கறிஞர் கண்ணதாசன், வழக்கறிஞர வாகை சேகர், செங்கோல், வீரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.என்.வி.எஸ். செந்தில் குமார், தெற்கு ரெயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங்கை சந்தித்து முக்கிய ரெயில்களை மொரப்பூர் மற்றும் பொம்மிடி ரெயில் நிலையங்களில் நின்று செல்ல கேட்டுக்கொண்டார்.

# அரசு ஊழியர் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பல்வேறு சங்கங்கள் நன்றி!

















தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.10.2023) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 1.7.2023 முதல் 4 சதவிகித அகவிலைப்படியை உயர்த்தி வழங்கியமைக்காக பல்வேறு அரசு அலுவலர்கள் சங்கங்கள், அரசு பணியாளர்கள் சங்கங்கள், ஓட்டுநர் சங்கங்கள், தொழிலாளர்கள் சங்கங்கள், போக்குவரத்து கழக சங்கங்கள், செவிலியர் சங்கம் மற்றும் பல்வேறு ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே..பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், அக். 30-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகளுக்கும் மற்றும் கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதி களுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (Blc) மாவட்ட செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரி பார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வ தற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்பு பவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவமான படிவம் 6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1 வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023

2 பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை

3 சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05.11.2023

18, 19.11.2023

4 இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 05.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

---

கன்னியாகுமரி மாவட்டத்தில்

# ரூ.296.08 கோடி மதிப்பில் நடைபெற்றுவரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்!

கன்னியாகுமரி, அக்.30-

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்றும் வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (28.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

நாகர்கோவில் மாநகராட்சி பகுதி மக்களின் குடிநீர் ஆதாரத்திற்காக அம்ரூத் குடிநீர் அபிவிருத்திதிட்டத்தின்கீழ் கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுவரும் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மொத்தம் ரூ.296.08 கோடிகளில் ரூ. 111.72 கோடி (அம்ரூத்) இந்திய அரசின் மூலமாகவும், ரூ. 44.68 கோடி தமிழ்நாடு அரசின் மூலமாகவும், உலக வங்கி கடனாக ரூ. 52.46 கோடி, மூலதன மானிய நிதி ரூ.44.65 கோடி மற்றும் ரூ. 23.21கோடி நகராட்சி நிதி பங்களிப்பு மூலமாகவும் மற்றும் 5 வருடத்திற்கான வருடாந்திர பராமரிப்பிற்கான நிதி ரூ. 19.36 கோடி நகராட்சி நிதி பங்களிப்புமூலமாகவும்நிறைவேற்றப்பட உள்ளது.

இத்திட்டம் நிறைவேறும் போது மக்கள்தொகைக்கேற்ப 2.80 இலட்சம் மக்களுக்கு 41. 12 மில்லியன் லிட்டர் மற்றும் உச்சகால (2047) மக்கள்தொகையின்படி 3.90 இலட்சம் மக்களுக்கு 52.04 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

நாகர்கோவில் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு பெருஞ்சாணி கிராமத்தின் அருகே புத்தன் அணையின் மேற்புறம் உள்ள பரளியாற்றில் 8.00 மீட்டர் விட்டமுள்ள நீர் எடுக்கும் கிணறு அமைக்கப்பட்டு அதிலிருந்து மேற்பரப்புநீரை 130 HP (14278 LPM 31 M Head 2 Nos 1 No stand bye ) மின் இயந்திரம் மூலம் நாகர்கோவில் மாநகராட்சியில் உள்ள கிருஷ்ணன்கோவில் சுத்திகரிப்பு நிலையத்தின் அருகே அமைக்கப்படவுள்ள 41.12 MLD புதிய சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்படவுள்ளது.

பின்னர் சுத்திகரிப்பு செய்யப்பட்ட குடிநீர் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 12 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் புதியதாக அமைக்கப்படவுள்ள 11 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் சேகரிக்கப்படவுள்ளது. பின்னர் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிகளிலிருந்து நகராட்சி முழுவதற்கும் புதியதாக பதிக்கப்படவுள்ள 420.612 கி.மீ குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் 85,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் இத்திட்டம் 98% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பகிர்மான குழாய் மற்றும் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்படவுள்ளது. இப்பணிகள் அனைத்தும் நவம்பர் மாதத்திற்குள் முடித்திட ஒப்பந்ததாரருக்குஅறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு டிசம்பர் மாதத்தில் சோதனை ஓட்டம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 3.9 இலட்சம் பயனாளிகள் பயன்பெற உள்ளனர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் எச்.ஆர்.கௌசிக், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர், உதவி பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (28.10.2023) போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொது மக்களின் நலனுக்காக தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், சமூக ஊடக தளம் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திரரெட்டி, சிறப்பு செயலாளர் தி.ந.வெங்கடேஷ், போக்குவரத்துத்துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம் மற்றும் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

---



### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்அவர்களால் தொடங்கப்பட்ட

### “உடன்பிறப்புகளாய் இணைவோம்”என்ற மாபெரும் முன்னெடுப்புடன்

### “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு”

### புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்தியவரலாற்றில் ஜனநாயகமுறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநிலஅமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒருஇலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு. கழகம்.

“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டிகாத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒருகோடி உறுப்பினர்கள் சேர்க்க “உடன் பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்டபேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜூன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதியஉறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்.” ஏன கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற ‘தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்’ நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதிமுதல் 2023 ஜூன் 3ஆம் தேதிவரை, “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுமற்றும் கழகபவளவிழா ஆண்டு” உறுப்பினர்களை சேர்த்தல்பணிகளை “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒருகோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்றபடிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 1 முதல் 1000 வரை**எண் கொண்ட இரசீதுகள் வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 நவம்பர் 7ஆம் தேதிமுதல் 10ஆம் தேதிக்குள்**,தலைமைக் கழகத்திற்கு நேரில்வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரிபார்த்து பெற்றுச் செல்லவேண்டுமெனகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெறமுடியாத நிலை ஏற்படு மாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

**புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவாரகாலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பிவைத்திட வேண்டும்.**

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்
### தலைமைக் கழக இரசீது எண். 1 முதல் 1000 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மத்திய
9) திருவள்ளூர் மேற்கு
10) காஞ்சிபுரம் வடக்கு
11) காஞ்சிபுரம் தெற்கு
12) வேலூர்
13) திருப்பத்தூர்
14) விழுப்புரம் வடக்கு
15) கள்ளக்குறிச்சி தெற்கு
16) கடலூர் கிழக்கு
17) தஞ்சை மத்திய
18) தஞ்சை தெற்கு
19) புதுக்கோட்டை வடக்கு
20) சேலம் கிழக்கு
21) சேலம் மத்திய
22) நாமக்கல் மேற்கு
23) கோவை வடக்கு
24) கோவை தெற்கு
25) கோவை மாநகர்
26) திருப்பூர் தெற்கு
27) ஈரோடு வடக்கு
28) மது ரைவடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) தென்காசி தெற்கு

**குறிப்பு :** தலைமைக் கழக இரசீது எண்.1000க்கு மேல்உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.
நாள் : 28-10-2023.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

அ.தி.மு.க.வும் - பா.ஜ.க.வும் நாடகமாடி மாணவர்களுக்கு மாபெரும் துரோகம்!

# ‘நீட் விலக்கு’: அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிட தொடர்ந்து போராடி வருகிறது தி.மு.க.!

## ‘நியூஸ் 18-தமிழ்’ தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா வாதம்!

**சென்னை, அக்.29**

**‘நியூஸ் 18 தமிழ்’ தொலைக் காட்சியில், பா.தமிழரசனை நெறியாளராகக் கொண்டு நடை பெற்ற ‘தமிழ்நாட்டுக்கு ‘நீட்’ விலக்கு நேரில் வலியுறுத்திய முதல்வர் மு.க. ஸ்டாலின், ஒப்பு தல் கொடுப்பாரா குடியரசுத் தலைவர்?’ என்ற தலைப்பில் நடைபெற்ற ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் வழக்கறிஞர் தமி ழன் பிரசன்னா அளித்த பேட்டி வருமாறு:-**



தமிழன் பிரசன்னா — நெறியாளர் பா.தமிழரசன்

**நெறியாளர் பா.தமிழரசன்:** தி.மு.க. சார்பில் வழக்கறி ஞர் தமிழன் பிரசன்னா உங் களிடமிருந்து தொடங்குகி றேன். ‘நீட்’விலக்குக்காக தொடர்ந்து தி.மு.க. முன் னெடுப்புகளை மேற் கொண்டு வருகிறீர்கள். ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெ ழுத்து இயக்கம். இப்போது குடியரசுத் தலைவரிடம் போய் இருக்கிறார்கள். குடி யரசுத் தலைவர் ஒப்புதல் கொடுப்பாரா ? நம்பிக்கை இருக்கா?

**வழக்கறிஞர் தமிழன் பிர சன்னா:** உண்மையாக மக் கள் மாண்புடைய, மக்கள் கருத்தை புரிந்து கொண்டு, மாநிலத்தினுடைய உரிமை, மாநிலத்தின்னு டைய உரிமை மட்டுமல்ல, ஒரு சட்டமன்றத்தில் 230 பேர் தீர்மானத்தை ஆத ரித்து, ஏறக்குறைய 99 சதவி கிதம் பேர் ஆதரித்த ஒரு தீர்மானம், அது சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக் கையின் அடிப்படையில் அல்ல, அது மாநில மக்களி னுடைய உணர்வு. அந்த மாநில மக்களின் உணர்வை புரிந்துகெண்டு குடியரசுத் தலைவர் வழங்க வேண்டும் என்பது தான் எங்களுடைய ஆசை. அது குறித்து மத்திய அமைச்சரவை கேட்ட கேள்விகள், குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து எங்களுக்கு வந்த கேள்விகளுக்கெல்லாம் தொடர்ச்சியாக நாங்கள் பதிலளித்து இருக்கிறோம்.

இந்த இரண்டாண்டுக ளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்பாடுகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக எடுத்து இருக்கக் கூடிய தொடர் முயற்சிகளை எங் கள் மீது இன்றைக்கு கை காட்டுகின்றவர்கள் யாரும் செய்யவில்லை என்பது தான் எங்களுடைய நேரி டையான குற்றச்சாட்டு.

இதே அ.தி.மு.க. ஆட்சி யில் இப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட் டது. ஏறக்குறைய 21 மாதங்கள் அந்தத் தீர்மா னம் எங்கே இருந்தது என்று கூட யாராலும் கண்டுபி டிக்க முடியவில்லை. ஆளு நர் மாளிகை, குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்தது என்றார்கள், ஆர். டி.ஐ. போட்டு கேட்ட போது அப்படி ஒரு தீர்மா னமே வரவில்லை என்ற ஒரு செய்தியை நமக்கு குடி யரசுத் தலைவர் மாளிகை சொன்னது. ஆனால், இங்கே இந்த ஆட்சி மாற் றத்திற்குப் பிறகு தி.மு.க. வந்த உடனேயே சட்டமன் றத்தில் தீர்மானம் இயற்றி யது.

ஆளுநர் கிடப்பில் போட் டார். மீண்டும் போராடி னோம். அதற்குப் பிறகு சில கேள்விகளோடு திருப்பி அனுப்பினார். நாம் மீண் டும் அவர் அனுப்பிய இரண் டாவது நாளிலேயே இரண் டாவது தீர்மானத்தை இயற்றி அனுப்பினோம். ஐந்து மாதங்கள் கழித்து மிகப்போராட்டம் நடத்தி னோம். அதன் பிறகுதான் அந்தத் தீர்மானம் குடிய ரசுத் தலைவருக்கு அனுப் பும் முகமாகத்தான் அவர் மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்துக்கு அனுப்பி இருக்கிறார்.

நாம் கேட்கும் கேள்வி ஒன்றுதான். நாம் படித்த பாடத்தில் நீங்கள் கேள்வி கேட்கவில்லை. நீங்கள் அனுப்புகிற பாடத்தில் தான் கேள்வி கேட்க வேண் டும் என்று சொல்லி இந்த நுழைவுத் தேர்வு என்கின்ற ஒரு கட்டமைப்பை கொண்டு வந்து எங்களு டைய மருத்துவக் கனவை முறித்தீர்கள். அனிதாவில் தொடங்கி கடைசியாக ஜெகதீஸ்வரனும் அவரு டைய தந்தையும் சேர்ந்து சொன்ன விஷயம் இது தான்.

எங்களிடத்தில் நல்ல மார்க் இருக்கு, பணம் இல்லை, ஆனா, நீட்டை கொண்டு வந்து எங்களு டைய மருத்துவக் கனவை முடக்கி விட்டீர்கள் அப் படி என்கின்ற ஒரே ஒரு விஷயம்தான். தொடர்ச்சி யாக இந்த இறந்துபோன மாணவிகளுடைய அந்த வாக்கு மூலங்கள் நமக்கு பதிவு செய்து இருக்கின்றன.

**நெறியாளர்:** நீங்கள் தொடர்ந்து சொல்கிறீர்கள். நான் என்ன கேட்கிறேன். திடீரென்று தி.மு.க. நீட் குறித்து வேகப்படுத்துகிறதா தன்னுடைய செயல்பாடு கள் மூலம் அப்படி என்கின்ற கேள்விகள் முன் வைக்கிறார் கள். கையெழுத்து இயக்கம். குடியரசுத் தலைவரிடம் போய் வலியுறுத்துகிறது. இவையெல்லாம் ஒரு நெருக்கடியாக உங்களுக்கு உருவாகியிருக்கிறதா?

**வழக்கறிஞர் தமிழன் பிர சன்னா:** இது நெருக்கடி இல்லை. நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான கட மைப் போராட்டம். வாக்கு றுதியை சொல்லிவிட்டு ஜெயலலிதா அவர்கள் கூட தான் வாக்குறுதியை கொடுத்தாங்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்த லுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றால் ‘நீட்’ விலக்கை கொண்டு வருவேன் என்று சொன் னார்கள். ஜெயலலிதா பேசி னார்கள். இது எல்லோருக் கும் தெரியும். வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே ஜெயலலிதா கூறி னார். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் விலக்கு கண் டிப்பாக இருக்கும் என்று ஜெயலலிதா சொன்னார். அதற்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சிதான் வந்தது, நடை முறைப்படுத்தப்பட்டதா ?

நீட்டை ஒழிப்பதற்கான ரகசியம் எங்களுக்குத் தெரி யும் அப்படி என்கின்றது ஒன்று. முதல் கையெழுத்து அப்படி என்ற விஷயங்க ளுக்குள் போவதற்கு முன் நீங்கள் திராவிட முன்னேற் றக் கழக தேர்தல் அறிக் கையை பாருங்கள். இது அ.தி.மு.க.வும் போட்டோ ஷாப் வைத்து கட்சி நடத் திக் கொண்டு இருக்கின்ற பா.ஜ.க.வும் அடித்து விடு கின்ற கப்ஷாக்களுக்கு நான் பதில் சொல்ல விரும் பவில்லை.

எங்கள் தேர்தல் அறிக் கையில் சொல்லப்பட்டு இருக்கின்ற வாக்குறுதி களை ஒவ்வொன்றாக நிறை வேற்றிக்கொண்டு வருகி றோம். இந்த வாக்குறுதி களை நிறைவேற்றுகின்ற முகமாகத்தான் ஆளுநர் அவர்களோடு மட்டும் ஏறக் குறைய இரண்டாண்டுகள் போராடியிருக்கிறோம். எடப்பாடி ஆட்சி கிட்டத் தட்ட இரண்டு ஆண்டு காலம் தூங்கிக்கிட்டு இருந் தது.

2016 தேர்தலில் ஜெயல லிதா சொன்னது. நான் வந் தால் நிச்சயமாக நீட்டை விலக்குவோம் என்பது. அந் தக் காலங்களுக்குள்ளாக அவர்கள் செய்திருக்கின்ற சட்டப் போராட்டங்கள் என்ன. அவர்கள் உச்சநீதி மன்றத்தில் நடத்திய நாட கம் என்ன? நாடாளுமன் றத்தில் நடத்தப்பட்ட நாடகங்கள் என்ன? இந்த நாடகங்களை புறந்தள்ளி நாங்கள் மாணவர்களுக்கு உண்மையாக இதில் விலக்கு பெற்றுத் தர வேண் டும் என்று ஒரு அரசியல் அமைப்பு சட்டத்தின் பால் ஏற்றுக் கொண்ட பொறுப் பின் அடிப்படையில், ஆளு நரிடத்திலே போராட்டம், ஆளுநருக்குப் பிறகு சட்ட மன்றத்தில் போராட்டம், நாடாளுமன்றத்தில் போராட்டம், இன்றைக்கு அதனை மக்கள் இயக்கமாக மாற்றுகின்ற போராட்டம். அதற்குப் பிறகு இன்றைக்கு உச்சபட்சமாக போய்ச் சேர வேண்டிய இடம் குடியரசுத் தலைவர் மாளிகை. ஜெக தீஸ் வரனுடைய மரணத் தின் போது அன்று மாலையே குடியரசுத் தலை வருக்கு முதலமைச்சர் கடி தம் எழுதினார்.

இந்த மாண்பை நீங்கள் தயவு செய்து புரிந்து கொள் ளுங்கள். நீங்கள் நீட்டின் வழக்கை எடுத்து பார்த்தீர் கள் என்றாலே தெளிவாகத் தெரியும். நீதிபதி அல்ட மாஸ் கபீர் மிகவும் தெளி வாகவே சொல்கிறார்.

இது நாடகமாக இருந் தால் ஆட்சிக்கு வந்த உட னேயே தீர்மானம் ஏன் போட வேண்டும்.? தீர்மா னம் அனுப்பிவிட்டு இரண்டு ஆண்டுகள் தூங்கு வதற்குத் தெரியாதா அ. தி.மு.க. மாதிரி அல்லது உச் சநீதிமன்றத்தில் செல்லவே செல்லாத சட்டத்தை எதிர்த்து வழக்கு போட்டு விட்டு, அதனை உச்சநீதி மன்றத்தில் வழக்கு போட்டு இருக்கிறோம் என்று சொல் லத்தெரியாதா? அப்படி இல்லை.

நாங்கள் கண்டிப்பாக ஆட்சிக்கு வந்த உடனேயே நடத்தப்பட்ட விஷயங் களை நான் பட்டியலிட்டு இருக்கேன். அந்தப் பட்டிய லில் கடமை உணர்ச்சி இருக்கு. முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலின் அவர் கள் கூறிய வாக்குறுதி நிறை வேற்றுவதற்காக போராடிக் கொண்டிருக்கிறார். ஒவ் வொரு மசோதாவையும் நாங்கள் தயார் செய்து அனுப்புகின்ற போது ஆளு நர் மாளிகை ஆளுநர் மாளி கையாக இல்லாமல், ஆர். எஸ்.எஸ். பார்வை கொண்டு எல்லா மசோதாக் களையும் கிடப்பில் போட் டுக் கொண்டு ஆர்.எஸ். எஸ்.சை வளர்ப்பதற்காக ஆளுநர் தெருத் தெருவாகப் போகிறார். அது குறித்து கேட்பதற்கு இங்கே நாதி இல்லை.

குடியரசுத் தலைவர் மாளிக்கைக்கு போய் இருக் கின்றது என்று கேட்கிறீர் களே அந்த குடியரசுத் தலை வர் மாளிகைக்கு போவதற் காக நாங்கள் இரண்டு வரு டம் போராடி இருக்கி றோம். அந்த போராட் டத்தை கொச்சைப்படுத்தக் கூடாது.

**நெறியாளர்:** உங்களு டைய நிறைவு கருத்தை கூறுங்கள்?

**வழக்கறிஞர் தமிழன் பிர சன்னா:** இங்கே பேசிய சீனி வாசன், போகின்ற போக் கில் ஆர்.எஸ்.எஸ்.சின் அண்டைப் புளுகு ஆகாசப் புளுகு என்று அடித்து தள்ளி விட்டு போய்க்கிட்டே இருக்கிறார். 2010-இல் காந் திச்செல்வன்தான் இந்த மசோதாவை தாக்கல் செய் தார் என்றது முதல் அண் டப்புளுகு.

அன்றைக்கு மத்திய சுகா தாரத்துறை அமைச்சராக இருந்தவர் குலாம் நபி ஆசாத், அவர் தான் தாக்கல் செய்தார் என்பது உண்மை. இரண்டாவது அண்டப் புளுகு தி.மு.க.வினர் அதனை ஆதரித்து வாக்க ளித்தார்கள் என்று சொல் வது ஆர்.எஸ்.எஸ்.சின்னு டைய அண்டப்புளுகு.

அப்போதே அந்த மசோ தாவை எதிர்த்து மத்திய இணை அமைச்சர் உள்பட அனைவரும் வெளிநடப்பு செய்தது தி.மு.க., அந்த மசோதாவை தாக்கல் செய் வதற்கு முன்பாகவே சோனியாகாந்திக்கும், மன்மோகன் சிங்கிற்கும் குலாம் நபி ஆசாத்திற்கும் தமிழினத் தலைவர் கலை ஞர் கடிதம் எழுதினார்.

நுழைவுத் தேர்வு எந்த வடிவத்தில் வந்தாலும் எதிர்ப்போம் என்று எழுதி அந்த வழக்கை முதன் முத லில் இந்தியாவிலேயே உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்தது தி.மு.க. ஆட்சி. அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர்.

2011-இல் அந்த வழக் கிற்கு நீட்தேர்விற்கு இடைக்கால தடையைப் பெற்றதும் தி.மு.க., முத்த மிழறிஞர் கலைஞர் தலை மையிலான ஆட்சி.

இதே அவர்களுடைய சிற்றறிவிற்கு சொல்கிறேன். உச்சநீதிமன்றத்தில் என்ன வாதாடினார்கள். என்று கேட்டார்கள். அட்டமஸ் கபீர் அவர்களுடைய 247 பக்க தீர்ப்பை நான் சீனிவா சன் அவர்களுக்கு அனுப்பு கிறேன். அந்தத் தீர்ப்பை படியுங்கள். அதில் தமிழ் நாடு அரசின் வாதம் என்ன, எந்த அடிப்படையில் அல்ட மஸ் கபீர் சொன்னார், “நீட் இஸ் ஏ இங்கஸ்ட் பார் சோசியஸ் ஜஸ்டீஸ்” என்று ஒரு வரியில் கிட்டத்தட்ட 19 பக்கங்களுக்கு பாடம் எடுத்து இருக்கிறார்.

நீட் எப்படி எல்லாம் வந் தது, எப்படி எல்லாம் கொண்டு வந்தீர்கள் என்று அந்தத் தீர்ப்பை எழுதுகி றார். இரண்டாவது அ. தி.மு.க.விற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பா.ஜ.க.விற்கும் இதற்கும் சம்பந்தமில்லை, தி.மு.க.வும் காங்கிரசும் தான் கொண்டு வந்தது. அப் படி என்றால் உச்சநீதிமன் றம் தடையைக் கொண்டு வந்ததற்குப் பிறகு இதில் உங்கள் சூத்திரம் என்ன வென்றால், அல்டமஸ் கபீர் ஓய்வு பெறுகிறார். அதற்கு இடையில் இருந்த நீதிபதியும் ஓய்வு பெறுகி றார். கடைசி நீதிபதியான தவே மட்டும்தான் இருக்கி றார். தவே யார் என்பது உங்களுக்கும் நல்லா தெரி யும், எங்களுக்கும் ஏன் உல கத்துக்கே நல்லா தெரியும்.

நீதிபதி தவே அவர்களி டத்தில் ரிவிவ் பெட்டி சனை எந்த சங்கி அமைப்பு கொண்டு போனது. அந்த அமைப்பில் எப்படி நீங்கள் வாதாடினீர்கள். அப்போது உங்களுடைய சொலிஸ்டர் ஜெனரல் என்ன சொன் னார் என்றால், நாங்கள் இது குறித்து ஒரு சட்டத்தி ருத்தத்தைக் கொண்டு வரு கிறோம். அந்த சட்டத்தி ருத்தத்தின் அடிப்படையில் நீட்டை கட்டாயமாக்கு வோம் என்று 2016 ஜூலை 4-ஆம் தேதி இந்திய மருத் துவக் கவுன்சிலின் டெண்டி சட்டத்தை திருத்தினது யாரு. டெண்டி சட்டம் என்ன சொல்கிறது? இந் தியா முழுக்க நீட் கட்டா யம். அப்போது யார் பிரத மர். மரியாதைக்குரிய மோடி. அன்றைக்கு யார் உள்துறை அமைச்சர், அன் றைக்கு யார் மருத்துவத் துறை அமைச்சர் இவை யெல்லாம் சீனிவாசன் அவர்களுக்கு நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை.

மிக முக்கியமாக அன் றைக்கு 2016-இல் நாடாளு மன்றத்தில் இருந்த தி.மு.க. வின் உறுப்பினர்களின் எண் ணிக்கை மூன்றே பேர்தான். ஆனா அ.தி.மு.க.வுக்கு இருந்தது 56, அந்த 56 பேர் ஆதரித்து வாக்களிக்காமல், எதிர்த்து வாக்களித்து இருந் தால் ‘நீட்’ கட்டாயமே ஆகி இருக்காது. நீட் கட்டாமே ஆகியிருக்காது. நீங்கள் நீட் தேர்வையே நடத்தி இருக்க முடியாது.

அன்றைக்கு அ.தி.மு.க. பா.ஜ.க.வோடு கைகோர்த் துக் கொண்டு ஜெயலலிதா மருத்துவமனையில் இருந் தாலும் நாடகமாடுவதற்கு ஈ.பி.எஸ்.சும், ஓ.பி.எஸ்.சும் அன்றைக்கு இருந்த சீனிவா சன் இங்கே செங்கோட் டையனை கூப்பிட்டீர்கள் இல்லையா, நான் மா.பா. பாண்டியராஜனை சொல்கி றேன். இந்த மூன்று பேரும் தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த துரோகம் இந்த நீட். இந்த நீட்டை நீக்க இன்றைக்கும் நாங்கள் போராடிக் கொண்டிருக்கி றோம்.

ஜஸ்டிபிகேஸன் கேட் டீர்கள், சி.பி.எஸ்.சி. என் பது உங்கள் பாடத்திட்டம். மாநிலத்திற்கென்று கல் வியை ஏற்றுவதற்கு கல்வி பாடத்திட்டதை உருவாக் குவதற்கு ஏன் மருத்துவத் திற்கு கல்விப் பாடத்திட் டத்தை உருவாக்குவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கு. செடில்யூ 7 இல் பார்ட் 3 இல் செக்ஷன் 25யில் *We are all over prite*, எங்களுடைய உரிமையில் தலையிடு வதற்கு இவர்கள் யார்.? இது முதல் ஜஸ்டிபிகிசேன்.

இரண்டாவது இவர்கள் சொல்கின்ற பாடத்திட்டத் தில் தான், கிராமப்புற மாணவன் படிக்க வேண் டும் என்று நினைப்பது எந்த வகையில் நியாயமானது. அன்றைக்கு மதுரை உயர்நீ திமன்றத்தில் இருந்த நீதியர சர் சி.டி.செல்வம் ஒரு கேள்வி கேட்டார். சி.பி. எஸ்.சி. பாடத்திட்டத்தில் மட்டும்தான் கேள்வி கேட் பீர்கள் என்று சொல்கிறீர் கள் இல்லையா, கிராமப்புற மாணவன், சாதாரண வறு மையில் இருக்கக் கூடிய வன், நகரத்தில் இல்லாத வன், சி.பி.எஸ்.சி. பாடத் திட்டத்தில் படிக்காத ஏழை மாணவன் படிக்கின்ற போது அவனுக்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்றால் அதுவும் சமூக நீதிக்கு எதிரா னது. ஜஸ்டிபிகேசன் பார் சோஷியல் ஜஸ்டிஸ்.

**நெறியாளர்:** உச்சநீதிமன் றத்தில் வழக்கு இருக்கிறது. அதில் தி.மு.க. தன்னை இணைத்துக் கொள்ளாதது ஏன் என்று அவர் கேட்கி றாரே?

**வழக்கறிஞர் தமிழன் பிர சன்னா:** அதுவும் அண்டைப் புளுகு, ஆகாசப் புளுகுதான். ஏன் என்றால். இன்றைக்கு தி.மு.க., அ.தி.மு.க. அரசாங் கம் செல்லாத இந்திய மருத் துவக் கவுன்சில் ஆணையத் தினுடைய அந்த டெண்டியை எதிர்த்து போட்டார்கள்.

ஆனால் இன்றைக்கு அத னுடைய நேஷனல் மெடிக் கல் கவுன்சில் யுனிட் என்று போட்டு அகதாமியில் கொண்டு வந்து அந்த செ க்ஷன் 16டி யாக மாறி இருக்கு. செத்துப்போன ஒரு சட்டத்தை அ.தி.மு.க. உச்சநீதிமன்றத்தில் போட்டு தூங்கிட்டு இருந் தது. நம்பர் கூட பண்ண வில்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடனே அந்த பெட்டி சனை வாங்கிக் கிட்டு அதனை மறுபரிசீலனை செய்து, அதனை இன் றைக்கு உச்சநீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்திருக் கிறோம். இது இராம.சீனி வாசன் அவர்களுக்கானது. அடுத்து சங்கரன் அவர்கள் திருக்குறளாக கூறினார். இருவருக்கும் சேர்த்து சொல்கிறேன்.

“தெய்வத்தால் ஆகாதெ னினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலி தரும்.”

நாங்கள் அதனை நீக்குவ தற்காக போராடுகிறோம். டாக்டர் முத்துலட்சுமி அம் மாவிலிருந்து உங்கள் ஆளு நர் தமிழிசை வரைக்கும் எந்த நீட்டும் எழுதவில்லை. அவர்கள் மருத்துவர்கள் தான். உலகத்திலேயே இந் தியாதான் மருத்துவ சுற்று லாவுக்கு தலைநகரம். அந்த தலைநகரத்தின் தலைநகரம் தான் சென்னை. உலகத்தின் மருத்துவத் தலைநகரத் திற்கே சென்னைதான் தலைநகரம். நாங்கள் அத் தனை கட்டமைப்புகளை உருவாக்கி இருக்கிறோம். ஆனால் இப்போது அவர் கள் என்ன சொல்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டுக்கு புதிய மருத்துவக்கல்லூரிகள் கிடையாது. யார் சொல்கி றார், ஜஸ்டிபிகேசன் கேட்ட இராமசீனிவாசன் ஆதரிக்கின்ற மோடி சொல் கிறார். புதிய மருத்துவக் கல் லூரிகள் இல்லை. மாநிலத் தில் மாணவர்களின் எண்ணிக்கையை கூட்டி கேட்க முடியாது. இனி மேல் தமிழ்நாட்டிற்கு புதிய மருத்துவக் கல்லூரியே கிடையாது. முதலில் நீட் என்று கொண்டு வந்தீர்கள். எங்கள் மாணவர்களை முடக்கினீர்கள். அவன் மருத்துவம் படிக்கிறான் என்று தெரிந்து கொண்டு, புதிய கல்லூரிகள் கிடை யாது என்கின்ற அய்யோக் கியத்தனத்தை எங்கள் மாணவர்கள் மீதான சமூக நீதியை புறக்கணித்து ஆர். எஸ்.எஸ். தத்துவத்தை திணிக்கிறார்கள்.

இங்கே பிரபஞ்சனைப் பற்றி பேசினார்கள். பிரபஞ் சன் என் தம்பிதான், நான் பாராட்டுகிறேன். எத்தனை அட்டம்டில் பாஸ் செய் தார். எத்தனை முறை கோச் சிங் சென்டர் சென்றார். அவர் எவ்வளவு பணம் கட் டினார், என்பதையெல் லாம் யோசிக்க வேண்டும் இல்லையா?

அனிதா ஏன் செத்து போனார் என்றால் சாதா ரண தலித் சமூகத்தில் பிறந்து குடிசையில் வாழ்ந்து படிக்கவே முடியாமல் லாந் தர் விளக்கில் படித்து 1200 க்கு 1176 மார்க் பெற்றவர்.

அதே மார்க்தான் பிர பஞ்சன், அந்த பிரபஞ்சன் மூன்று முறை அட்டம்டில் மூன்று வருடத்திற்கு 15 இலட்சம், 15 இலட்சம், 15 இலட்சம் ரூபாய் என்று 45 இலட்சம் ரூபாய் கட்டி டாப்பர் ஆகின்றவர்களுக் கும் வறுமையில் வாடுகின்ற அனிதாவைப் போன்று; ஒன்றுமில்லை ஜெகதீசன் இறந்து விட்டார். அவன் நண்பர் கேட்டார். என்னி டத்தில் பணம் இருக்கிறது. குறைந்த மார்க் எடுத்தேன். ஆனால் நான் கோச்சிங் கிளாஸ் போனேன், இப் போது மருத்துவம் படிக்கி றேன் என்றார். இங்கே பேசி யவர் தரமான கல்வி என் றார், இன்றைக்கு ‘முட்டை’ மார்க்எடுத்தால்நீட் என்கின்ற நிலைக்கு வந்துவிட்டது.

இவ்வாறு வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா பேட்டி யளித்தார்.

# மதவெறி அறவே அகற்றப்பட வேண்டும்!

என் இனிய தமிழ் சொந்தங் களே....!

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் என்பது ....இந்திய நடுத்தர மக்கள்... ஏழை மக்கள்...விவசாயிகள்....மாண வர்கள்....தொழிலாளர்கள் ...ஜனநா யக ஆதரவாளர்கள் ...ஆகியோருக்கு இது ஒரு சுதந்திர போராட்டமாகவே விளங்கும்.

1942 ஆகஸ்ட் 8ஆம் நாள் அண் ணல் காந்திஜி சொன்னார்...இது என் இறுதிப் போர்....என்று! அப்போது தான்...வெள்ளையனே வெளி யேறு.....என்ற தீர்மானமும் நிறைவே றியது! அன்றுதான் மகாத்மா உரத்த குரலிலே...செய் அல்லது செத்துமடி.... என்ற கோஷத்தையும் முன் வைத் தார்.அதனைக் கேட்டு இந்திய நாடே குலுங்கியது.அதே நிலைமை தான் இன்று இந்தியாவில் நிலவுகிறது. அன் றைய வெள்ளைக்கார வியாபாரிகளை விட....இந்திய கார்ப்பரேட்டுகளின் கொடுமைகள் மக்களால் சகிக்க முடி யாத நிலையை உருவாக்கி இருக்கி றது! இந்திய பொருளாதாரமும் இந்திய அரசியலும் கார்ப்பரேட்டுகளினால் சிதைக்கப்பட்டு விட்டது.

இன்று கார்பரேட்டுகளின் பண உத வியோடு...மைனாரிட்டிகளின் மதக் கோட்பாட்டை முன்வைத்து...சனா தன தர்மம் என்ற கண்துடைப்போடு இந்திய ஜனநாயகத்தை இந்துத்துவா ஏகாதிபத்தியமாக மாற்றி பாரதத்தை பார்ப்பனர்கள் கையிலே ஒப்படைக்க ஒன்றிய ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த நிலையில் ஜனநாயகத்தை காப்பாற்ற மாற்றிக் கொள்கை....மாற்றுக் கோட்பாடுகள் அவசியமாகிறது. வரப் போகின்ற நாடா ளுமன்ற தேர்தல் களத்தில் எதிரெதிராக நின்று மோதப் போகும் கொள்கைகள் ரெண்டு தான்!

ஒன்று வந்தேறிகள் வளர்த்து வைத் திருக்கும் சனாதன தர்மம். மற்றது இந்த மண்ணின் மைந்தர்கள்.... பழங்குடியினர்....ஆதிவாசிகள்....திரா விடர்கள்...ஆண்டாண்டு காலமாக தங்கள் வாழ்க்கை நெறியாக..தங்கள் வாழ்க்கையின் கோட்பாடாக கொண் டுள்ள சமநீதி...சமதர்மம்....சாதிகள் அற்ற சமுதாயம்....மனிதநேயம் பாராட்டும்.....குளத்துக்கு ஒரு நீதி... குலக்கல்வி திட்டங்களை விரட்டி அடிக் கும் பகுத்தறிவு பாராட்டு பெற்ற திரா விட அரசியல். திராவிட அரசியல் தான் சனாதன தர்மத்துக்கான எதிர் அரசி யல் என்பதனை இந்திய மக்களுக்கு எடுத்துச் சொல்லி இந்திய அணி உரு வாக....அது வெற்றி நடை போட உழைக்கும் நமது முத்துவேலர் கரு ணாநிதி ஸ்டாலின் அவர்களை எவ்வ ளவு பாராட்டினாலும் தகும்.

நமது முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் இந்திய ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக களம் இறங்கி விட் டார்.....!

வ.உ.சிதம்பரனாரின் சுதேசிக் கப்பல் கம்பெனியின் ஆரம்பம்.... பொருளாதாரத் துறையில் சுதந்திரம் பெற இந்தியா செய்யும் முதல் முயற்சி என்பதனை பிரிட்டிஷ் அதிகாரிகள் புரிந்து கொண்டனர். அதேபோல் ஆன் மீகத்துக்கு நான் எதிரி அல்ல...ஆனால் ஆன்மீகத்தின் பெயரால் சில அக்ர ஹார அநீதிகளை அனுமதிக்க மாட் டேன் என பிரகடனப்படுத்தும் நமது முதல்வர் திராவிட அரசியலை கையில் எடுத்ததே மைனாரிட்டிகளின் மெஜா ரிட்டி தவறுகளை ஒழிப்பதற்காக என் பதை புரிந்து கொண்ட ஒன்றிய ஆட்சி யாளர்கள் தமிழகத்துக்கு உள்ளேயே நமது முதல்வரை முடக்கிவிட முறை யற்ற தாக்குதல்களை பல முனைகளில் கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

ஆட்டுத்தாடி கவர்னரிலிருந்து அவர் களின் கடைசித் தொண்டன் வரை தொல்லை கொடுப்பதில் அனைத்து எல்லைகளும் மீறப்படுகின்றன. சகுனி களாலும் கூனிகளாலும் வேகத்த டையை ஏற்படுத்த முடியுமே தவிர வெற்றித்தடை ஏற்படுத்தவே முடியாது. மதவிரோதிகளாக திராவிடக் கழகங் களை முத்திரை குத்தி தமிழ்நாட்டுக் குள் முடக்கி விட்டால்....திராவிட அரசி யல் இந்திய ஜனநாயகத்தை காப்பாற்ற வராது என நினைக்கும் அறிவிலிக ளுக்கு ஒன்றை மட்டும் நான் உறுதி யாக சொல்லுவேன். கார்ப்பரேட்டுக ளையும் ஊழல் அரசியல்வாதிகளை யும் மடாதிபதிகளையும் சகல வசதிகளு டன் வாழ வைத்துவிட்டு ஏனைய அனைத்து இந்திய குடிமக்களையும் வறுமையில் வாட விட்டால்...அவர்க ளின் வசதிகளை குறைத்து விட்டால்.... அவர்களை தீராத துன்பத்துக்கு ஆளாக்கி விட்டால்....அவர்கள் கதி யற்று ஆண்டவனை தேடி ஓடுவார் கள்....அதனால் பக்தி வளரும்...மதம் வளரும் என ஒன்றிய ஆட்சியாளர்கள் நினைப்பார்களேயானால் அது மிகத்த வரான எண்ணமாகும்.

அதற்கான தண்டனையை 2024 இல் நாடாளுமன்றத் தேர்தலில் அவர் கள் அடைந்தே தீருவார்கள். திராவிட அரசியலில் மக்களுக்கான சிந்தனைகளே அதிகம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதே திராவிட ஆன்மீகம். கடவுளிடம்....தேவாரங் களை...திருப்புகழை...திருவாசகத்தை பாடிஅவருக்கு அன்பை விளை விப்பதே எமது ஆன்மீகம்! இந்தியா வில் 14 சாத்திர நூல்கள் தோன்றுவ தற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் சாத் திர நூலாக திகழ்ந்தது திருமந்திரம் ஆகும். திராவிட அரசியல் எப்படி மக்க ளுக்கு ஆனதோ....

அதேபோல் திராவிட ஆன்மீகமும் மக்களுக்கே ஆனது! மத வெறியர்க ளுக்கானது அல்ல! ஆகவே இனி ஒட்டு மொத்த இந்திய நாட்டுக்கும் தேவையா னது திராவிட அரசியலும் திராவிட மத நெறியும் தான்.மதவெறி அறவே அகற் றப்பட வேண்டிய ஒன்று! இதனை மன தில் கொண்டு மக்கள் 2024 நாடாளு மன்றத் தேர்தலை சந்திப்பார்களே ஆனால் இந்தியாவின் ஜனநாயகம் காப்பாற்றப்படும்.உலக மக்கள் இந்திய மக்களை பாராட்டுவார்கள்!



**வி.செ.குகநாதன்**
திரைப்பட
இயக்குநர்

முதல் கட்டமாக ரூ.50 கோடி மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைப்பு!

# மொரப்பூர் ரயில் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணி தொடக்கம்!

## தருமபுரி செந்தில்குமார் எம்.பி. தகவல்!

தருமபுரி, அக்.30-

தருமபுரி மாவட்ட மக்களின் 80 ஆண்டு கால கனவு திட்டம் தரு மபுரி மொரப்பூர் இணைப்பு ரயில் திட் டம். இத்திட்டத்திற் காக 2023 மத்திய பட் ஜெட்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய் யப்பட்டது. தருமபுரி மொரப்பூர் ரயில் திட் டத்திற்கு தேவையான நிலங்கள் அளவிடப் பட்டு நில உரிமையாளர் களுக்கு நிலத்திற்கான தொகை நிர்ணயம் பணி கள் முடிவடைந்தது.

தருமபுரி நாடாளு மன்ற உறுப்பினர் மருத் துவர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார் அதற்கு ரயில்வே பொது மேலா ளர் ஆர்.என்.சிங் அவர் களை சந்தித்து ரயில் திட் டத்திற்கு நில அளவை பணிகள் முடிவடைந்தது நிலத்திற்கான தொகையை விடுவிக்க வேண்டும் என கேட் டுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து நில அளவைப் பணி மற் றும் நில உரிமையாளர்க ளுக்கு வழங்க வேண்டிய தொகை 50 கோடி ரூபாயை முதல் கட்ட மாக ரயில்வே துறை விடு வித்துள்ளது.

மேலும் தருமபுரி மாவட்டம் மொரப்பூர் மற்றும் பொம்மிடி ரயில் நிலையங்களில் பொது மக்களின் கோரிக்கை யான கோவை சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ். கன் னியாகுமரி பெங்களூர் எக்ஸ்பிரஸ் பொம்மிடி ரயில் நிலையத்திலும் சென்னை திருவனந்த புரம் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ். கோயமுத் தூர் திருப்பதி இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ் மொரப்பூர் ரயில் நிலை யத்திலும் நின்று செல்ல வேண்டுமென தெற்கு ரயில்வே மேலாளர் இடம் சந்தித்து நேரடி யாக கோரிக்கை வைத் தார்.

தற்போது கோயம்புத் தூரில் இருந்து சென்னை வரை சென்று வரும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் மொரப்பூர் ரயில் நிலையத்தில் குறைந்த பட்சம் இரண்டு நிமிடங் கள் நின்று செல்ல வேண் டும் என கோரிக்கை விடுத்தார் முக்கியமான ரயில்களை மொரப்பூர் மற்றும் பொம்மிடி ஆகிய இரண்டு ரயில் நிலை யங்களில் நிறுத்த வேண்டும் என்று பல முறை மத்திய அமைச்சர் மற்றும் தெற்கு ரயில்வே யின் பொது மேலாளர் ஆகிய தொடர்பு கொண்டு கடிதத்தின் வாயிலாக கோரிக்கை விடுத்து உள்ளதையும் நாடாளுமன்ற உறுப்பி னர் அதிகாரியிடம் வலி யுறுத்தினார்.

### பயனாளிகளுக்கு ரூ.26.97 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

# விடுபட்ட தகுதியான மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும்!

## நாகர்கோவிலில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

கன்னியாகுமரி, அக். 30-

கன்னியாகுமரி மாவட்ட வருவாய்த்துறை மற்றும் மகளிர் திட்டத்தின்கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு. தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (28.10.2023) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில் –

பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களும் ஆண்களுக்கு நிகராக சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்காக வழிவகை செய்யும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதியினை நிறை வேற்றும் வகையில் தகுதியான குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமை தொகை வழங்க ஆணை பிறப்பித்ததன் அடிப்படையில் மாதந்தோறும் ரூ.1000/- அவர்களுடைய வங்கி கணக்கில் சேர்வதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கிற வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1000 டெபிட் கார்டுகள் மற்றும் 255 மகளிர்சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரத்து சகோதரிகளுக்கு ரூ.26.97 கோடி அளவில் கடனுதவி வழங்கும் விழாவில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் மகத்தான திட்டத்தை முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள். 1 கோடியே 6 லட்சத்து 58 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டை பின்பற்றி பிற மாநிலங்கள்!**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், கிட்டத்தட்ட 2 லட்சத்து 82 ஆயிரம் பேர் பயன்பெற்றுள்ளனர். ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய திட்டம் செயல்படுத்தப்பட்டது, இதுவே முதல் முறை. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி தான் உங்களுக்கு உரிமைத் தொகை வழங்குவதற்கான தேதி என்றாலும், ஒரு நாள் முன்னதாக 14 ஆம் தேதியே தமிழ்நாடு அரசால் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு 1000 டெபிட் கார்டுகளை வழங்குகிறோம் என்றால், இவை பணம் எடுப்பதற்கான கார்டுகள் மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கையை மாற்றப் போகிற துருப்புச்சீட்டு. இந்தத் திட்டத்தை பின்பற்றி, கர்நாடகா, தெலங்கானா போன்ற மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எந்த ஒரு அரசு திட்டத்தை செயல்படுத்தப்படுகிற போதும், மேல்முறையீடு செய்கிற வசதி இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை பொறுத்தவரை, விண்ணப்பம் ஏற்கபடாதவர்கள், மீண்டும் மேல்முறையீடு செய்கிற வசதியைச் செய்துள்ளோம். இதுவரை 11 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர். மேலும், உங்கள் மேல்முறையீட்டை பரிசீலிக்க துணை ஆட்சியர், சார் ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளோம். மகளிர் மட்டுமன்றி திருநங்கையர், மாற்றுத் திறனாளிகளும் இன்றைக்கு இந்த திட்டத்தால் பயன்பெற்று வருகின்றனர். நான் சட்டமன்றத்தில் பேசியது போல், தகுதியுள்ள ஒரு மகளிர் கூட இந்த திட்டத்தில் இருந்து விடுபட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறோம்.

மகளிர் முன்னேற்றமே மாநிலத்தின் முன்னேற்றம் எனும் உயரிய எண்ணத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கடனுதவி வழங்க இந்தாண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் 25 ஆயிரம் பேருக்கு ரூபாய் 26.97 கோடி மதிப்பில் கடன் உதவிகளை வழங்கியுள்ளோம்.

**மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்கள்!**

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது. நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அதை செய்தார்கள், கலைஞர் அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றம் மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று பெரியார் சொன்னார். ஒன்று, கலாச்சார ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, சட்ட ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று, பொருளாதார ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்று பெரியார சொன்னார்கள்.

பெண்கள் முன்னேற்றத்துக்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகள் என்னென்ன? தந்தை பெரியார் அவர்களே சொன்னார், பணக்காரன் – ஏழை அடிமைத்தனத்தை விட, மேல்ஜாதி – கீழ் ஜாதி அடிமைத்தனத்தை விட, முதலாளி – தொழிலாளி அடிமைத்தனத்தை விட மோசமனது இந்த ஆண் – பெண் அடிமைத்தனம் என்று சொன்னார். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது. பெண்களுக்கு படிப்புத் தேவையில்லை. குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும் தான் பெண்களுக்கு வேலை. இப்படி தான் நம்முடைய சமுதாயம் ஒரு காலத்தில் இருந்தது. இது எல்லாத்தையும் எதிர்த்து பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்தது நம்முடைய அரசு. தமிழ்நாடு அரசின் திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான நமது திராவிட மாடல் திட்டங்கள்.

இரண்டாவதாக, சட்ட ரீதியாகப் பெண்களுக்கு இருந்த முட்டுக்கட்டை என்ன? ஒரு தாய் வயிற்றில் பிறந்தாலும், ஆண் பிள்ளைக்கு மட்டும் தான் அப்பா சொத்திலே உரிமை இருக்கிறது. பெண் பிள்ளைக்கு சொத்திலே உரிமை கிடையாது என்கிற நிலை தான் சட்ட ரீதியாக இருந்தது. ஆனால், நமது முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான், தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்கள். இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமைக் கிடைத்திருக்கிறது. அடுத்ததாக, பொருளாதார ரீதியில் பெண்களுக்கு இருக்கக் கூடிய முட்டுக்கட்டைகள் என்ன? ஒரு பெண் சிறுமியாக இருக்கும் போது, பணத்திற்காக தனது அப்பாவை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வளர்ந்து திருமணம் ஆனதும் பணத்திற்காக கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்த பெண் வயது முதிர்ந்த காலத்தில் பணத்திற்காக தனது மகனை எதிர்பார்த்திருக்க வேண்டும். இப்படி தான் இருக்கிறது பெண்களின் நிலை.

**பெண்களின் சிரமத்தை குறைக்கும் திட்டம்!**

இந்த நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும். அதனால், நாட்டிலேயே முதல்முறையாக முத்தமிழறிஞர் கலைஞர் , 1989 ஆம் ஆண்டே மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கினார்கள்.• கலைஞர் வழியில், நம்முடைய திராவிட மாடல் அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்குகிறது. படிப்பதற்காக அல்லது வேலைக்காக பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிக முக்கிய மானது. 17 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பெண்களுடைய சிரமத்தை குறைக்கக் கூடியத் திட்டம் அது. காலையிலே எழுந்து வேலைக்கு செல்லக் கூடிய பெண்கள், தங்கள் குழந்தைகளுக்கு டிபன் சமைச்சு வச்சுட்டு போறது எவ்வளவு சிரமம்? அந்த சிரமத்தை இந்த திட்டம் போக்கியிருக்கிறது.

இதுவரை தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையானது என்று சொல்லக் கூடிய திட்டம் தான் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம். இந்த திட்டத்திற்கு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் வைத்திருக்கும் பெயர் தான் இதிலே முக்கியமானது. இந்த திட்டம் மகளிருக்கான உரிமை என்பதால், இதற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று பெயர் வைத்துள்ளார்கள். பெண்களுடைய உழைப்புக்கு ஓர் அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் இப்போது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். உங்களுடைய மகனாக, சகோதரனா இருந்து இதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெண்கள் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல் பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போது தான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும். பெண்கள் மொபைல் பயன்படுத்துகிறீர்கள். உங்களுக்கு நிறைய செய்திகள் வரும். அப்படி வருகிற செய்திகள் உண்மையா பொய்யா என்று நீங்கள் ஆராய்ந்து அதனை மற்றவர்களுக்கு ஷேர் செய்ய வேண்டும்.

உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீதம் பெண்கள் வந்திருக்கிறார்கள். அதனால் தான் தமிழ்நாட்டில் உள்ள மேயர், நகராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர் ஆகிய பதவிகளில் 50 சதவீதம் பேர் பெண்களாக உள்ளனர். இந்த சாதனையை நடத்திக் காட்டியது நம் திராவிட மாடல் அரசு. பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவுப் பெற்றவர்களாக இருப்பது தான் பெண்ணுரிமைக்கான அடித்தளம். இந்த நேரத்தில் மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தந்தை பெரியார் சொன்னது தான். மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காக வும் பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே, மகளிர் நிறைய படிக்க வேண்டும், முற்போக்காக சிந்திக்க வேண்டும். அப்போது தான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் முன்னேற முடியும்.

ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள். எனவே, பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையப் போகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு வழங்கப்படும் இந்த கடனுதவியை, தமிழ்நாடு முதலமைச்சர் வெறும் கடன் தொகையாக பார்க்கவில்லை. மாறாக சுய உதவிக் குழு சகோதரிகளின் உழைப்பிற்கான நம்பிக்கைத் தொகையாகத் தான் பார்க்கிறார்கள். இங்கு வந்துள்ள, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பயனாளிகளுக்கும், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கும் எனது அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். விடுப்பட்ட தகுதியான மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். பயன்பெற்ற பயனாளிகள் அனைவரும் தமிழ்நாடு அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்ல நீங்கள் ஒவ்வொருவரும் Brand Ambassador ஆக – தூது வர்களாக மாறிட வேண்டும்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் பேசினார்.

அதனைத்தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் 1000 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கான அட்டையினையும், மகளிர் திட்டத்தின்கீழ் 255 சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 24,529 பயனாளிகளுக்கு ரூ.26.97 கோடி மதிப்பில் கடனுதவிகளும் வழங்கினார்கள்.

முன்னதாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி வளாகத்தில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்து பல்துறை பணி விளக்க முகாமினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் பார்வையிட்டார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்), மாவட்ட வருவாய் அலவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் எச்.ஆர். கௌசிக், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் க.சேதுராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சங்கரநாராயணன், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.விமலா ராணி, மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் கனராஜ், வட்டாட்சியர்கள் இராஜா சிங் (அகஸ்தீஸ்வரம்), கண்ணன் (கல்குளம்), முருகன் (திருவட்டார்), திருமதி.அனிதா குமாரி (கிள்ளியூர்), வினைதீர்த்தான் (தோவாளை), குமாரவேல் (விளவங்கோடு), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. ஹெலன் டேவிட்சன், மாமன்ற உறுப்பினர் செல்வி.கௌசிகா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆஸ்டின், திருமதி.புஷ்பலீலா ஆல்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

---

### திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் - நீட் தேர்வை ரத்துசெய்திட கோரும்

## மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் “இரண்டாம் கட்ட நிகழ்வு”

**மாவட்டச்செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை**

*திருவாரூர், அக்.30-*

*திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*முதல்வர்,கழக தலைவர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க. இளைஞர் அணி , மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் நீட் தேர்வை ரத்துசெய்ய கோரி நடைபெறும் மாபெரும் கையெழுத்து இயக்கம், இளைஞர்களின் எதிர்காலம், கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சென்னையில் துவக்கி வைக்கப்பட்ட நிலையில் , இந்த மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் 2 வது கட்ட நிகழ்வு, திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் இன்று (30.10.2023) திங்கள்கிழமை காலை 10 மணி அளவில், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையிலும், கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது.*

*எனவே அது சமயம் மாவட்டநிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் , தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் பங்கு பெறுவதோடு, அந்தந்த பகுதிகளை சேர்ந்த கழக உடன்பிறப்புக்கள் மற்றும் கழக முன்னோடிகளை கலந்து கொள்ள செய்து கையெழுத்திட்டு நீட் தேர்வு எதிர்ப்பினை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

---

# வேகமெடுக்கும் ‘நீட் விலக்கு’ கையெழுத்து இயக்கம்!

மாநில சுயாட்சிக்காகவும், மக்களின் நலன்களுக்காகவும் தொடர்ந்து போராடி வரும் கழகமும் கழக அரசும், தற்போது மாணவர்களின் கல்வி உரிமைக்கான போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டு ஏழை மாணவர்களின் மருத்துவ கனவை அடியோடு சிதைக்கும் நீட் தேர்வுக்கு எதிராக தொடங்கப்பட்டிருக்கும் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ தான் அந்த போராட்டம்.

எதிர்க்கட்சியாக இருந்தபோது மக்கள் மன்றத்தின் மூலம் நீட் கொடுமை குறித்து கழகத்தால் எடுத்துரைக்கப்பட்டது. கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர் சட்டமன்றத்திலும் முன் வைக்கப்பட்டு சட்ட ரீதியிலான போராட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பாக நடத்தப்பட்ட மாநிலம் தழுவிய மாபெரும் உண்ணாநிலை அறப்போராட்டத்திற்கு மக்களிடம் அமோக வரவேற்பிருந்தது. அதன் தொடர்ச்சியாக தற்போது தொடங்கப்பட்டுள்ள ‘நீட் விலக்குநம் இலக்கு’ என்ற கையெழுத்து இயக்கம் மக்களின் ஆதரவுடன் வேகமெடுத்து வருகிறது.

பள்ளியில் 12 ஆண்டு காலம் படித்து பெற்ற மதிப்பெண் அடிப்படையில் ஒரு ஏழை மாணவ-மாணவியரால் மருத்துவம் படிக்க முடியவில்லை என்ற நிலை மிகவும் ஆபத்தானது என்பது ஒன்றிய அரசுக்கு புரியவில்லை. தகுதியைப் பற்றி பேசும் பா.ஜ.க. அரசு, முதுநிலை மருத்துவம் படிப்பதற்கான தகுதி மதிப்பெண்ணாக பூஜ்யத்தை நிர்ணயித்துள்ளது. இதில் இருந்தே பா.ஜ.க.வின் தகுதி என்ன என்பது அம்பலப்பட்டிருக்கிறது. நீட் தேர்வு வந்ததற்குப் பின் வணிக ரீதியிலான பயிற்சி வகுப்புகளே அதிகரித்து வருகின்றன. ஒன்றிய அரசு சொல்லும் தகுதியும், திறமையும் எங்கே இருக்கிறது?

இந்த அயோக்கியதனத்திற்கு எதிராக மக்கள் அனைவரும் குரல் எழுப்பி வருகின்றனர். அதனை ஒருங்கிணைத்து ஒன்றிய அரசுடன் நடத்தப்படும் சமூகநீதி போராட்டம் தான் ‘நீட் விலக்குநம் இலக்கு’ கையெழுத்து இயக்கம். இது தி.மு.க.வின் ஆதாயத்திற்காக நடத்தப்படவில்லை. தமிழ்நாட்டு மாணவர்களுக்காக, இங்கு கட்டமைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆரோக்கியமான மருத்துவ சூழலை பாதுகாப்பதற்காகவே. தமிழ்நாடு மட்டுமல்ல நாட்டில் இருக்கும் ஏழை மாணவர்களின் மருத்துவக் கனவை மனதில்வைத்தே இதுபோன்றவிழிப்புணர்வு பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சமூக நீதி போராட்ட வரலாற்றில் மிக முக்கிய மைல் கல்லாக, கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணிகள் சார்பில் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக தி.மு.க.நடத்தும் இந்த அறப்போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பு மக்களும், அனைத்துக் கட்சியினரும் ஆதரவு அளித்துள்ளனர். ஆனால், பா.ஜ.க. அரசுடன் ரகசிய உறவு வைத்திருக்கும் அடிமை அதிமுக, இதற்கு ஆதரவு அளிக்கவில்லை. தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக செயல்படுவதாக கூறும் எடப்பாடி பழனிசாமி, நீட் தேர்வு வேண்டாம் என்பதை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தாமல் இருப்பது ஏன்? சுயநலம் காரணமாகவே அதை செய்யவில்லை. ஒன்றிய அரசை எதிர்த்துப் பேசினால், தனது கட்சியினர் மீது புலனாய்வு அமைப்புகள் ஏவப்படும் என்ற அச்சம் தான் அவருக்கு அதிகரித்துள்ளது. இப்படிப்பட்டவர் தமிழ்நாட்டு மக்களுக்காக எப்படி நல்லது செய்வார். பா.ஜ.க.வுடன் கூட்டணியில் இருந்து கொண்டு ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளுக்கு ஆமாம் சாமி போட்ட பழனிசாமி, நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து பரிகாரம் தேடிக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்யமாட்டர்கள், சூழலுக்கு தகுந்தாற்போல் தங்களை மாற்றிக் கொள்ளும் பச்சோந்திகள் என கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கூறியது 100 சதவிகிதம் உண்மை.

தி.மு.க.வின் ஒவ்வொரு நிர்வாகியும் பட்டிதொட்டியெல்லாம் சென்று நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டியது ஏன்? என்பதை மக்களிடம் எடுத்துரைத்து வருகின்றனர். ஏராளமான மக்கள் தாமாக முன்வந்து கையெழுத்து இயக்கத்தில் பங்கெடுத்து வருகின்றனர். டிஜிட்டல் மூலமாகவும், அஞ்சல் அட்டை மூலமாகவும் நீட் தேர்வு வேண்டாம் என்பதை அழுத்தமாக பதிவு செய்து வருகின்றனர். கையெழுத்து இயக்கம் தொடங்கிய சில நாட்களிலேயே, இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்று ஆதரவு தெரிவித்து வருகின்றனர். மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. நீட் தேர்வு வந்தால் முறைகேடே நடக்காது என்று கூறியது முற்றிலும் பொய் என்பது தொடர்ந்து அம்பலப்பட்டு வருகிறது. இதையெல்லாம் அறிந்ததனாலேயே, கையெழுத்து இயக்கத்திற்கு மக்களின் ஆதரவு அதிகரித்து வருகிறது.

தேர்தல் களத்தில் ஒற்றைச் செங்கலை எடுத்து வரலாறு படைத்த கழக இளைஞரணி செயலாளர், தற்போது ஒன்றிய அரசின் ‘முட்டையை’ வைத்தே சரித்திரம் படைப்பார். அவரது முன்னெடுப்பில் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ள இந்த இயக்கம், நாடே திரும்பிப் பார்க்கும் மாபெரும் இயக்கமாக உருவெடுக்கும் என்பது நிச்சம். நீட் விலக்கு நமது லட்சியம்.



**ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.**
மகளிர் தொண்டர் அணி
இணைச் செயலாளர்

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெ. சுந்தரராஜன்

**அக்டோபர் 30 (2021)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சென்னை இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பிரதிநிதி, பொருளாளர், அவைத்தலைவர் எனவும், தொடர்ந்து பகுதிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**வடசென்னை கூட்டுறவு சங்கத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**கழகத் தலைவர் அவர்கள், “களத்தில் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றும் நல்லதொரு தளகர்த்தரை கழகம் இழந்திருக்கிறது” என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னை தீனன்

**அக்டோபர் 30 (1977)**



**சென்னை, சைதாப்பேட்டை, முனியப்பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த இவர், இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகப் பணியாற்றியவர்.**

**1977ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க, சென்னையில் நடைபெற்ற பேராட்டத்தில் கறுப்புக் கொடி ஏந்தி களம் கண்டபோது, அன்றைய ஆட்சியாளரின் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் நேற்று முன்தினம் (28.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான அட்டைகளை வழங்கி பேசினார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்) உட்பட பலர் உள்ளார்கள்.



நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் நேற்று முன்தினம் (28.10.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்துறை பணிவிளக்க முகாமினை பார்வையிட்டார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்) உட்பட பலர் உள்ளார்கள்.




நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் நேற்று முன்தினம் (28.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான அட்டைகளை வழங்கினார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்) உட்பட பலர் உள்ளார்கள்.



நாகர்கோவில் மாநகராட்சியின்கீழ் கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்று வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை நேற்று முன்தினம் (28.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் எச்.ஆர்.கௌசிக் உட்பட பலர் உள்ளார்கள்.

### பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிப்பீர்!

# எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே!

## உலக சிக்கன நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, அக். 30-**

**“பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலக சிக்கன நாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சிக்கனத்தின் இன்றியமையாமையை அனைவருக்கும் உணர்த்திடும் நாளாக அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள், ஆண்டுதோறும் “உலக சிக்கன நாள்” எனக் கொண்டாடப்படுவதைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைவதுடன் என் மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பமும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமித்தால், அதன்வாயிலாகக் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன், அவ்வப்போது ஏற்படும் எதிர்பாரச் செலவினங்களையும் சமாளித்திட இயலும்.

“ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை”

என்ற குறளில் வள்ளுவர் பெருந்தகை, பொருள் வரும் வழி சிறிதாக இருந்தாலும், பொருள் செலவாகும் வழி பெரிதாக இல்லையெனில், அதனால் தீங்கு இல்லை என்று சிக்கனமாக வாழ்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். சேமிப்பின் அவசியத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே எடுத்துரைத்து, சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். “இன்றைய சேமிப்பு, நாளைய வாழ்வின் பாதுகாப்பு” என்பதனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைக்காக சேமிக்க வேண்டும்.

சேமிப்பே ஒருவரின் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுகிறது. சேமிப்பது மட்டுமல்ல, அதைச் சரியான வீதத்தில் முதலீடு செய்வதும் முக்கியம். எனவே, உலக சிக்கன நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில், மக்கள் தங்கள் சேமிப்புகளை அஞ்சலக சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து அதன்மூலம் தங்கள் வாழ்வில் வளம் சேர்ப்பதுடன், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிந்திட வேண்டுகிறேன்.

சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை திருப்பாலை. இ.எம்.ஜி. யாதவர் பெண்கள் கல்லூரியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகள் பங்குபெறும் கலை இலக்கிய போட்டிகளை தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உடன் சோழவந்தான், சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், பகுதிச் செயலாளர் சசிகுமார் ஆகியோர் உடன் உள்ளனர்.

கலைஞர் 100 1924 - 2023



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின்
116ஆவது பிறந்த நாள்
மற்றும்
குரு பூஜை

நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 10.30 மணி,
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின் நினைவிடத்தில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்
மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்

நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 9.30 மணி, இடம் : நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை, சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

செ.ம.தொ.இ./1239/வரைகலை/2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009

# திராவிட மாடல் அரசு 41

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## முறைசெய்து காப்பாற்றும் சமாதானம்!

மக்களாட்சிக் கட்டமைப்பில், ஒரு மாநிலத்துக்குத் தேவைப்படுகின்ற நிதி ஆதாரங்களில் ஒன்று, வரி. சமுதாயத்திலிருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தில் வணிக வரி, விற்பனை வரி உள்ளிட்ட வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்கின்றன.

தொழில் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபடும் வணிகர்கள், அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை முறையாக செலுத்தினால்தான் அரசு இயந்திரம் தொய்வின்றிச் சுழலும். வரி வருவாய் சீராக இருந்தால்தான் மக்கள் நலத் திட்டங்கள் உட்பட, பல வளர்ச்சிப் பணிகளை, அரசால் எந்தவிதச் சிரமும் இல்லாமல் மேற்கொள்ள முடியும்.

ஆனால், பல்வேறு காரணங்களால் தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக, 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் தொடர்புடைய வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 42 ஆயிரத்து 569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிக வரித் துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ கொண்டுவந்துள்ளதுதான், **‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’.**

### புதிய அணுகுமுறை... கூடுதல் சலுகை...

தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம் உள்ளிட்ட மேலும் பத்து சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. இந்தச் சட்டங்களை எல்லாம் உள்ளடக்கி, 2017-ஆம் ஆண்டுஜூலை 1 அன்று நாடு முழுவதும் ஜி.எஸ்.டி. சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், ஏற்கெனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச் சட்டங்களின் கீழ், மாநில அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன. இந்த நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்பது வணிகர்களின் நீண்ட கால கோரிக்கையாகும். அதைப் பரிசீலித்த நமது முதலமைச்சர், பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில், வணிகர்களுக்கும் வணிக வரித் துறைக்கும் இடையில் ஒரு சமாதானத்தைக் கொண்டு வர அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது தான் **‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’.**

கடந்த ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகை வசூலிப்பு தொடர்பாகப் பல சமாதான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருந்தாலும், **‘திராவிட மாடல் அரசு’** ஆட்சியில், புதிய அணுகுமுறையில், கூடுதல் சலுகைகளுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### தமிழ்நாடு வரலாற்றில் முதல்முறை...

இந்தத் திட்டத்தின் கீழ் வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் ஐந்து பிரிவினராகப் பிரிக்கப்படுகிறார்கள். முதலாவதாக, ஒரு வரிவிதிப்பு ஆண்டில் ரூபாய் 50 ஆயிரத்துக்குக் குறைவான வரி, வட்டி, அபராத தொகை செலுத்த வேண்டியவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறு வணிகம் செய்யும் எளிய வணிகர்களாகவே இருப்பார்கள். இவர்களின் நிலுவைத் தொகை முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்.

இதில் உள்ள சிறப்பம்சம், ரூபாய் 50 ஆயிரம் என்ற உச்சவரம்பானது, ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டுக்கும் பொருந்தும். அதாவது ஒரு எளிய வணிகருக்கு அவர் செலுத்த வேண்டிய நிலுவை ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டுக்கும் தனித்தனியாக ரூபாய் 50 ஆயிரத்துக்கு உட்பட்டிருந்தால், அது முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும். இது போன்றதொரு சலுகை வழங்குவது தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாகும்.

இதன் கீழ் சுமார் 1 இலட்சத்து 40 ஆயிரத்து 400 இனங்கள் தொடர்புடைய ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்கள் பயன்பெறுவார்கள். மொத்தம் ரூபாய் 147 கோடி நிலுவை முற்றிலுமாக இந்த வணிகர்களின் பொருட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது.

### பயனடையும் பெருவணிகர்கள்

வரி நிலுவை செலுத்த வேண்டிய எஞ்சிய வணிகர்கள், ரூபாய் 50 ஆயிரம் முதல் 10 இலட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் 10 இலட்சம் முதல் 1 கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் 1 கோடி முதல் 10 கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள் மற்றும் ரூபாய் 10 கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின் கீழ் கொண்டு வரப்படுவர். (அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் பார்க்க பெட்டிச் செய்தி)

இந்தத் திட்டத்தின் கீழ் நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் வைக்கப்பட வேண்டிய திரண்ட வட்டித் தொகையும் (ACCRUED INTEREST) முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும். மேலும், ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன், வரி நிலுவைக்காகப் பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துக்கள் வணிகர்களுக்கு உடனடியாகத் திரும்ப ஒப்படைக்கப்படும். இதன் மூலம் 47 ஆயிரம் வணிகர்கள் சிறப்புச் சலுகைகள் பெற்று வரி நிலுவைச் சுமையில் இருந்து வெளிவர இருக்கிறார்கள். இந்தத் திட்டம் 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 16 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. நான்கு மாத காலம் அதாவது 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி 15-ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும்.

யாருக்கும் தோல்வி இல்லாத வெற்றியின் இன்னொரு பெயர்தான் சமாதானம். இந்தத் திட்டம் மூலம் வணிகர்கள் வளம் பெறட்டும். வணிகம் வளரட்டும்!

...சாதனை தொடரும்

#### முதல் வரம்பினர்

**சலுகைகள் :** வரி, வட்டி, அபராத நிலுவையின் மொத்தத் தொகையில் 20 சதவிகிதத்தை ஒரே மட்டத் தொகையாக (FLAT RATE) அரசுக்குச் செலுத்தலாம் (அல்லது) ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரியை ஏற்றுக் கொண்டவர்கள், வரி நிலுவையில் 66 சதவிகிதம், அபராதத்தில் 10 சதவிகிதம், வட்டியில் 10 சதவிகிதம் என அரசுக்குச் செலுத்தலாம்.

**வழக்கு தொடுத்திருந்தால் :** நிலுவை வரியில் 33 சதவிகிதத்தையும், அபராதத்தில் 10 சதவிகிதத்தையும், வட்டியில் 10 சதவிகிதத்தையும் அரசுக்குச் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை ஆனால், வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 10 சதவிகிதத்தையும், வட்டியில் 10 சதவிகிதத்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** சுமார் 38,200 பேர்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 1,400 கோடி ரூபாய்.

#### இரண்டாவது வரம்பினர்

**சலுகைகள் :** மேலே சொல்லப்பட்ட சதவிகிதங்கள் பொருந்தும். ஆனால், ஒரே மட்டத் தொகை செலுத்தும் முறை கிடையாது.

**பயனடைவோர் :** சுமார் 7,265 பேர்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 3,495 கோடி ரூபாய்.

#### மூன்றாவது வரம்பினர்

**சலுகைகள் :** வரி விதிப்பை ஏற்றுக்கொண்டவர்கள் வரி நிலுவைத் தொகையில் 75 சதவிகிதத்தையும், அபராத நிலுவைத் தொகையில் 15 சதவிகிதத்தையும் மற்றும் வட்டி நிலுவைத் தொகையில் 20 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வழக்கு தொடர்ந்திருந்தால்:** வரி நிலுவையில் 50 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டித் தொகையில் 20 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை, ஆனால், வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 20 சதவிகிதத்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** சுமார் 1,454 பேர்.

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 6,800 கோடி ரூபாய்.

#### நான்காவது வரம்பினர்

**சலுகைகள் :** வரி விதிப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் வரி நிலுவையில் 90 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டி நிலுவையில் 30 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.


**வழக்கு தொடர்ந்திருந்தால் :** வரி நிலுவையில் 60 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 30 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை, ஆனால் வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 30 சதவிகித்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** 185 வணிகர்கள்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 13,100 கோடி ரூபாய்.

## ஆங்கிலத்தில் ஆரியமாயை!




தமிழ்நாட்டின் சிந்தனை வளர்ச்சியைச் செதுக்கியவை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் கருத்துகள்தான் என்றால் மிகையில்லை. அரசியல் வீரியம்மிக்க அந்த எழுத்துகளைப் பிறமொழிகளுக்கும் கொண்டு செல்ல வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. குறிப்பாக, ஆரியம் - திராவிடம் கருத்து மோதல்கள் உச்சம் பெற்றுள்ள இந்த நாட்களில், பேரறிஞர் அண்ணாவின் ‘ஆரியமாயை’ நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது DRAVIDIAN STOCK பதிப்பகம்.

“பேரறிஞர் அண்ணாவின் சொல்வளம் மிக்க மொழிநடையை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பது மிகச் சவாலானது” என்கிறார் இதனை மொழியாக்கம் செய்துள்ள நெய்வேலி அசோக். “அண்ணாவையும் பெரியாரையும் இந்தியா முழுக்க வாசித்தால், கண்டிப்பாக மாற்றம் ஏற்படும் என்பது என் நம்பிக்கை. தமிழர் அல்லாதோரிடம் பெரியாரையும், அண்ணாவையும், கலைஞரையும் கொண்டு சேர்க்க வேண்டியுள்ளது. அதற்காகத்தான் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளோம். ஆங்கிலமுறை கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்கும் இது பயன்படும். எனது நான்கு வருட ஆசை நிறைவேறியுள்ளது” என்கிறார் பதிப்பாளர் கௌதம். நூல் விலை ரூ.130

நூல் தேவைக்கு 90927-87854 என்கிற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். **பேரறிஞர் அண்ணாவின் தீ பரவட்டும்!**

## ஃப்ளாஷ்பேக்



### கழகக் ‘கோட்டை!’

என் தாத்தா கோட்டை சாமி அவர்கள் பேரறிஞர் அண்ணா காலம் முதலே கழகத்தில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றி வந்தவர். பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், நிலக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளராகவும் சில காலம் செயல்பட்டார். 1993-ஆம் ஆண்டு ஜனவரி 22 அன்று திண்டுக்கல் மாவட்டத்துக்கு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த முத்தமிழறிஞர் கலைஞரிடம் மாவட்டக் கழகத்தின் சார்பில் ரூ.10 இலட்சம் தேர்தல் நிதியாக வழங்கப்பட்டது. உடன் இன்றைய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களும் இடம்பெற்றிருக்கிறார். காலம் காலமாகக் கழக உணர்வு இன்றைக்கும் தொடர்கிறது.



நிஜான்தன்

**-பி.கே.நிஜான்தன், நிலக்கோட்டை, திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழ் மக்களின் கடமை!

**1943-ஆம் ஆண்டு, ஏப்ரல் 1-ஆம் தேதி, ‘திராவிட நாடு’ இதழுக்கு உதவி புரியும்படி தந்தை பெரியார் கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் 18-ஆம் தேதி ‘திராவிட நாடு’ இதழிலும், 28-ஆம் தேதி ‘விடுதலை’ இதழிலும் பிரசுரிக்கப்பட்டது. சுயமரியாதைக் கருத்துகள் நாட்டில் பரவ வேண்டும் என்கிற வேட்கை கொண்டிருந்த பெரியார், பத்திரிகைகள் வளர்வதிலும் பெரும் விருப்பம் காட்டினார். ‘குடி அரசு’, ‘திராவிட நாடு’ இரண்டையும் ஆதரிக்க வேண்டியது தமிழ் மக்கள் செய்ய வேண்டிய கடமையான தொண்டு ஆகும்’ எனக் கூறியிருந்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 285




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.



நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், ராமநாதபுரம்.
தெய்வத்திருமகன் பசும்பொன்
முத்துராமலிங்க தேவர்
குரு பூஜை
தமிழகத்தின்
வெற்றித் திருமகன்
திராவிட நாயகனே!
வருக! வருக!!
ARASU ARTS
அன்புடன் : கேஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டச் செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.


கலைஞர்
100
1924 - 2023
பசும்பொன்
முத்துராமலிங்கத் தேவர்
116வது ஜெயந்தி விழா
மாமன்னர் மருதுபாண்டியர்களின்
222வது குருபூஜை விழாவிற்கு
வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வருக வருக என வரவேற்கிறோம்
இவண்
பி. மூர்த்தி
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
மதுரை வடக்கு மாவட்ட செயலாளர்
கோ.தளபதி
சட்டமன்ற உறுப்பினர்
மதுரை மாநகர் மாவட்ட செயலாளர்
மு.மணிமாறன்
செயலாளர்
மதுரை தெற்கு மாவட்ட திமுக


மதுரை மாநகரில்
30.10.2023
கோரிப்பாளையம் -
வைகை ஆறு
உயர்மட்ட மேம்பாலம்
₹ 190.4 கோடியில்
தொண்டிசாலையில்
மேலமடை சந்திப்பில்
உயர்மட்ட மேம்பாலம்
₹ 150.28 கோடி
மதிப்பீட்டில் அடிக்கல்
நாட்ட வருகை தரும்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர் அவர்களே
வருக! வருக!
என அன்புடன் வரவேற்கிறோம்...
கோ.தளபதி MLA
மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர்
வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
மாண்புமிகு P.மூர்த்தி
வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர்
மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர்
M.மணிமாறன்
மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர்


நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்.
பசும்பொன் தேவர் திருமகனார்
116வது ஜெயந்தி விழா மற்றும்
61வது குரு பூஜை விழாவிற்கு
வருகை தரும்
ARASU ARTS
தேசியமும்,
தெய்வீகமும்
எனது இரு கண்கள்
என்ற தேவர் பெருமகனாரின் நினைவைப் போற்றும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வணங்கி மகிழ்கிறோம்...
அன்புடன் வரவேற்கும்
R.S.ராஜகண்ணப்பன் B.Sc.,B.L.,
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் M.L.A.,
மாவட்டக் கழகச் செயலாளர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.


அக்டோபர் 30
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்
116வது பிறந்தநாள், 61வது குருபூஜை
மற்றும் மருதிருவர் சிலைகளுக்கு
மாலை அணிவித்து மரியாதை
செலுத்த வருகை தரும்...
I.N.D.I.A WIN
திராவிட
மாடலே...!
வருக! வருக!! என வரவேற்கும்...
மாண்புமிகு.
R.S.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர்கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர்.
உயர்திரு.
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர்
Lr. இன்பா A.N.ரகு B.B.A.,LLB.,
கழக இளைஞரணி துணைச் செயலாளர்
கழக இளைஞரணி


PRIDE OF
"I.N.D.I.A."
கலைஞர்
100
1924 - 2023
நாள் : 30 – 10 – 2023,
திங்கட்கிழமை
தெய்வத்திருமகனார்
பசும்பொன்
முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின் குருபூஜையில் மாலை அணிவித்து
மரியாதை செலுத்திடவும்
மதுரை தெப்பக்குளத்தில் உள்ள
சுதந்திரப் போராட்ட வீரர்கள்
மருது சகோதரர்களின்
திருவுருவ சிலைகளுக்கு
மாலை அணிவித்து மரியாதை செலுத்திடவும்
மதுரை மாநகருக்கு வருகை தரும்
அன்புத் தலைவர்
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு P.T.R. பழனிவேல் தியாகராஜன்
தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
உயிருள்ளவரை உங்கள் வழியில்....
அதலை பி.செந்தில்குமார் M.A.,
கழக மாணவர் அணி துணைச் செயலாளர்



**காதர்பாட்சா முத்துராமலிங்கம்**
மாவட்டச் செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர்

**R.S.இராஜகண்ணப்பன்**
மாண்புமிகு
பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்

**அன்பகம் கலை**
இணை அமைப்பு செயலாளர்

## ஆப்பநாடு மறவர் சங்கம் சார்பாக
## தொடர்ச்சியாக மூன்றாம் ஆண்டு
# முதுகுளத்தூரில் தேவர் பெருமான்
## முதல் மாலை அணிவித்தார்

# மருத்துவர் ஆசிக் அமீன்
மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர்,இராமநாதபுரம்

*இந்த வாய்ப்பினை வழங்கியதற்கு மக்களுக்கு நன்றி*


கலைஞர் 100
1924 - 2023
இந்திய சுதந்திர
போராட்ட வீரர்
பசும்பொன்
முத்துராமலிங்கனார்
நினைவிடத்திற்கு
மரியாதை செலுத்த
முகவைக்கு
வருகைதரும்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
இந்தியாவின்
ஒட்டுமொத்த
ஜனநாயக குரலாக
ஒலித்துக்கொண்டிருக்கும்
கழகத் தலைவர்
அவர்களை வருக! வருக!!
என வரவேற்கிறேன்.
மாண்புமிகு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள்
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும்
சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் அமைச்சர்
திரு. காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் MLA அவர்கள்
மாவட்ட கழக செயலாளர்
பேரன்புடன்
வழக்கறிஞர்
இரா.ராஜீவ்காந்தி
கழக மாணவரணி தலைவர்




அக் 30 பசும்பொன் **தேவர்** ஜெயந்தி விழாவிற்கு வருகைதரும்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# கழக தலைவர்

## அவர்களே வருக! வருக!!

மாண்புமிகு. **R.S.ராஜகண்ணப்பன்** அவர்கள்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

திருமிகு. **சுப.தங்கவேலன்** அவர்கள்
முன்னாள் அமைச்சர், கழக செயல்திட்ட குழு உறுப்பினர்

திருமிகு. **காதர்பாட்சா முத்துராமலிங்கம்** MLA, அவர்கள்
மாவட்ட கழக செயலாளர், இராமநாதபுரம் மாவட்டம்

**K.முருகவேல்** Ex. MLA, மாநில விவசாய அணி துணை செயலாளர்,
முதுகுளத்தூர் - இராமநாதபுரம் மாவட்டம்.



தூத்துக்குடியில் இறகுப்பந்து உள்விளையாட்டரங்கத்தை கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்த பின்னர், மாலத் தீவு கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார். இதில் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக். 30 -

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. கழகத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவிலான இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நேர் காணல் குறித்து மாவட்டச் செயலாளர் திருமதி.பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. கழக தலைவரும், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப மாநில இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் தூத்துக்குடி மாநகர தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவிலான இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட இருக்கிறார்கள். அதன்படி வருகிற 03.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் வைத்து மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் முன்னிலையில் இந்த நேர்காணல் நடைபெற இருக்கிறது.

இதில் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வருகை தரும் அனைவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அடையாள அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞரணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால் அது தொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரியில் , மாவட்ட நிர்வாகம் , மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் மற்றும் இராஜ பாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார் .











நாள் : 30.10.2023 திங்கட்கிழமை
இடம் : இராமநாதபுரம் மாவட்டம்.
பசும்பொன்
முத்துராமலிங்கதேவர் நினைவிட
முகப்பில் பொதுமக்கள் பாதுகாப்பாக
மரியாதை செலுத்தும் வகையில்
ரூ.1,42,80,000 மதிப்பீட்டில்
ஒரு மண்டபமும், மிக முக்கிய பிரமுகர்கள்
மரியாதை செலுத்தும் பாதையில்
ரூ.12,54,000 மதிப்பீட்டில்
மற்றொரு மண்டபமும் தமிழ்நாடு அரசால்
அமைக்கப்படும் என்று அறிவித்த
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு
நன்றி..! நன்றி..!! நன்றி...!
தேவர் பெருமகனார் குரு பூஜைக்குப்
பசும்பொன் வருகை தரும்
தமிழகத்தின் தங்கம்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக. வருக..
என்றும் உங்கள் வழியில்
அக்ரி K.P.T.கணேசன்
கழகத் தீர்மானக்குழுச் செயலாளர்




30
அக்டோபர்
2023
நன்றி! நன்றி!! நன்றி!!!
போக்குவரத்து தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் அறிவித்த
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும்
கழக முதன்மை செயலாளர்
நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்
மாண்புமிகு கே.என்.நேரு அவர்களுக்கும்
போக்குவரத்து துறை அமைச்சர்
மாண்புமிகு சா.சி.சிவசங்கர் B.E., M.B.A., அவர்களுக்கும்
பேரவை பொதுச் செயலாளர்
மரியாதைக்குரிய மு.சண்முகம் MP அவர்களுக்கும்
பேரவை பொருளாளர்
மதிப்புமிகு கி.நடராசன் அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
T.சேகர் தலைவர்
P.குணசேகரன் பொதுச்செயலாளர்
S.அப்பாவு பொருளாளர்
A.கனகசபை அலுவலகச் செயலாளர்
மற்றும் அனைத்து நிர்வாகிகள்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக
தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
(பதிவு எண் : 609 /TRY பேரவை இணைப்பு எண் :475)
திருச்சி, கரூர் மண்டலம்




அக்டோபர் - 30
பசும்பொன்
தேவர் திருமகனார்
குருபூஜை விழாவிற்கு
வருகை தரும்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கும்...
R.S.ராஜகண்ணப்பன் B.Sc., BL.,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்
வாரியத்துறை அமைச்சர் கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் B.A., MLA
இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்
Vettri Arts 98402 06731
அன்புடன் ஏ.சி.ஜீவானந்தம் இராமநாதபுரம் மாவட்டம்



தமிழ்நாடு மின்வாரிய
பணியாளர்களுக்கு
கருணைத் தொகையுடன்
போனஸ் 20%
மற்றும்
01-07-2023 முதல்
முன்தேதியிட்டு அகவிலைப்படி
உயர்வு 42% - ல்
இருந்து 46% (4%)
உயர்த்தி வழங்கிய
தொழிலாளர் நலன் காக்கும்
திராவிட பேரரசர்
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு
எங்களின் நெஞ்சார்ந்த நன்றியினை
தெரிவித்துக்கொள்கிறோம்
மாண்புமிகு நிதி மற்றும் மின்துறை அமைச்சர்
தங்கம் தென்னரசு
பொதுச்செயலாளர்-தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை
மு.சண்முகம் MP
பா.மணிமாறன்
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
பேரவைச்செயலாளர்-தொ.மு.ச
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
OVIYAR NAGAA
@9524198893